# THE FAIR GHOST

## A TAMIL DRAMA

BY

RAO BAHADUR, P. SAMBANDAM, B.A., B.L.

*Author of :*

"The Two Sisters," "Galava," "Manohara," The Curse of Urvasi," "The Merchant of Vanipura," 'Fate and Love," "Simhalanatha" "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Bricks-between," "At any Cost," "The Fair Ghost," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "The True Brother," "As We Sow-So We Reap," "Malavikagnimitra," "Chandrahari," "The Demon Land," "Sabapathy" Part I, "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, "Blessed in a Wife," "The Dancing Girl," "Subbadra—Arjuna," "Karna the Giver," "Sahadeva's Stratagem," "The Surgeon General's Prescription," "Vichu's Wife," "Sakuntala," "Vikramorvasi," "The Point of View," "The Two Selves," "The Tragic Denouement," "The Sub-Asst. Magistrate of Sultanpet" "Harischandra," "Blind Ambition," "Markandeya," "Sarangadhara," "The Two Friends," "The Treachery of Kalappa" etc., in Tamil; and "Harischandra," and "Yayathi" in English.

THIRD EDITION.

Madras:

PRINTED BY KESARI PRINTING WORKS,
150, ANNA PILLAI STREET, G. T.

1931

Copy Right ] [Price Per Copy [redacted]

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உ

# பேயல்ல பெண்மணியே

இந்த நவீன நாடகம்

ராவ்பஹதூர்

## ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ்நூல்கள் :—
லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, மனோஹரன், நற்குலதெய்வம், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், காதலர் கண்கள், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத் தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னாவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், வள்ளி மணம், முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்கிரமோர்வசி முதலியன.

மூன்றாம் பதிப்பு.

[சென்னை 'கேஸரி' அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

1931

காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.]

INSCRIBED

THE BELOVED MEMORY OF

# MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

# MY FRIEND

C. RANGAVADIVELU.

## முகவுரை.

இந்நாடகத்தையாவது, அல்லது நான் பதிப்பித்துள்ள எனது மற்ற நாடகங்களையாவது எந்த சபையாராவது ஆட வேண்டுமென்றால், முன்னதாக எனக்குச் சேரவேண்டிய ராயல்டி கட்டணத்தைக் கட்டி, என் அனுமதி பெற்றே, பிறகு ஆடவேண்டும். இல்லாவிடில் காபிரைட் சட்டப்பிரகாரம், போலீஸ் கோர்ட்டில் தாவாவுக்குள்ளாவார்கள் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒரு கிரந்தகர்த்தாவுக்குச் சேரவேண்டிய ராயல்டி, அவர் ஆயுசுபரியந்தமும், அதற்குமேல் 50-வருஷகாலம் அவரது வார்சுகளுக்கும், உரித்தாயது என்பதை எல்லோரும் அறிவார்களாக.

நான் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை ஆச்சாரப்பன் வீதி 70-வது கதவிலக்கமுள்ள வீட்டிலும், எல்லாப் பிரபல புஸ்தக வியாபாரிகளிடமும் வாங்கிக் கொள்ளலாம்.

10—10—31
சென்னை.

இப்படிக்கு,
ப. சம்பந்தம்.

# பேயல்ல பெண்மணியே

## நாடக பாத்திரங்கள்

ராதாப்பிரியன் ... ... ... ஒரு சிற்றரசன்

ரகுவீரன் ... ... ... ... கோபாலபுரத்துக் கொத்தவால்.

சோமநாதன் ... ... ... கோபாலபுரத்தில் வசிக்கும் ஒரு மிராசுதாரன்.

வேங்கன்
சாமன்
துப்பன்
வேம்பிலி } ... ... குடியானவர்கள்.
ஆசிகான்
நாராயணன்
கோபாலன்

லலிதை ... ... ... ... ரகுவீரனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்.

பானுமதி ... ... ... ... லலிதையின் தாய்.

பங்கஜாட்சி ... ... ... ரகுவீரனை இச்சித்த ஒரு பெண்.

ஒரு பூஜாரி; குடியானவர்கள், பரிவாரங்கள்.

கதை நிகழிடம் :—கோபாலபுரம்.

# பேயல்ல பெண்மணியே

## முதல் அங்கம்.

### முதற் காட்சி.

*இடம்—கோபாலபுரம், ஒரு சிற்றாற்றின் கரையோரம், சற்று தூரத்தில் திரௌபதியம்மன் கோயில். காலம்—மாலை. சில குடியானவர்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.*

பல்லவி.

வந்தூதடா—அடே வந்தூதடா
அந்த துரோபதியின் உச்சவமும் வந்தூதடா .... வ

அநுபல்லவி.

இந்த மாசத்திலே எந்தவேலை செய்யோம்
தந்தானம் பாடியே தலைவிரிச் சாடுவோம் .... வ

சரணம்.

பொங்கலைத் திண்ணூட்டு புதூக்கள்ளைக் குடிச்சூட்டு
எங்க துரோபதியெ இன்புறச் செய்வோமே. .... வ

மு. கு. அடே! இந்தவர்சம் துரோபதியம்மன் உச்சவம்செரியா பண்ணணும். போன வர்சம் செரியா பண்ணாத்தொட்டு தான் நம்பளுக்குக் கஷ்டமெலாம் வந்துது. மயெ கியெ செரியா பேயலெ—

இ. கு. இந்த வெள்ள பிசாசி ஒண்ணுவந்து நம்ப ஊரெப் புடிச்சிக்கிச்சி—

மு. கு. ஆமாண்டா! ஆமாண்டா! என்னமோண்ணு பாத்தேன், நேத்து ராத்திரி எருமாட்டெ ஓட்டிக்னு திர்ம்பக்குள்ளோ, அதோ, அந்த ஏரியண்டெ வர்றேன்,

பின்னாலே, கல் கல், இண்ணு சத்தம் கேட்டது. என்ணண்ணு திர்ம்பிப் பாத்தேன்! பூமியும் ஆகாசமும் ஒண்ணா நிண்ணுதுடா எம்மவன்து! புடிச்சேம் பார் ஒரு ஓட்டம்! ஊட்லெ போயி பொதால் இண்ணு உய்ந்தேன்!

நா. கு. நான் பாக்றப்போ சின்னதா யிர்ந்துதேடா! வேளெக்கி ஒரு வேசம் போட்ராப்லெ யிர்க்குது.

இ. கு. ஆனக்கா, எப்பொப்பாத்தாலும் அந்த வெள்ளப் பொட வெவெ மாத்ரம் உட்ரதில்லெ!

கு. மு. அடே, எப்படியாவது நம்ப பூசாலிகிட்ட சொல்லி இந்த வர்சம் உச்சவத்திலெ இத்தெ ஓட்ட சொல்லனும்.

மு. கு. ஆமாமாம், அதுவும் இந்த வர்சம் உச்சவம் பலே தடபுடலு! சமாச்சாரம் தெர்யுமா?

நா. கு. ஆமாம், அல்லாந் தெரியுண்டா! நம்ப கொத்தவால் அய்யாவுக்குக் கூடபத்தா நாளு துரொபதெ அம்மன் கண்ணாலத்தோடே கண்ணாலம் நடக்கப் போவுது! எனக்குத் தெர்யாதோ? அவருதான் என்ன நேராகூப்டு 'ஏண்டா வேம்பிலி, உனக்கு என்ன தலெகுட்டே ஒணாம்' இண்ணு கேட்டாரே!

மு. கு. அடே! சாயந்திர வேளெ ஆய்ப்போச்சி! இனிமேலெ நாம்பொ யிங்கே யிர்க்கக் கூடாது. கோயிலண்டெ பூடுவோம் வாங்கொ.

மற்றவர்கள். ஆமாண்டா! ஆமாண்டா! அப்றம் அந்த வெள்ளெப்பிசாசி வந்துட்டா!

[எல்லோரும் வேகமாய்ப் போகிறார்கள்]

பங்கஜாக்ஷி வருகிறாள்.

ப. மங்கையென் நெஞ்சந் தன்னை
மாற்றியு மயக்கிப் பின்னர்
தங்கையென் றழைத்தே யென்னைத்
தவித்திடச் செய்தபாபி

நங்கையின் நலத்தை நாடி
நலங்கிளர் காத லோடு
அங்கையைப் பிடிக்க எங்ஙன்
அவனியிற் பொறுப்ப னந்தோ !

பின்புறமாகச் சோமநாதன் வருகிறான்.

சோ. பங்கஜாக்ஷி—

ப. யார் அது ?— [திரும்பிபார்த்து] நீயா ?—திடுக்கிட்டது! என்ன சமாசாரம் ? மறுபடியும் வந்தாயா ?

சோ. ஒண்ணு மில்லே ! [புன்னகை செய்கிறான்.]

ப. ஒன்று மில்லாததற்கா அழைத்தாய் ?

சோ. இல்லே ! [நகைக்கிறான்.]

ப. உம் ! என்ன சிரிப்பு ? சமாசாரம் என்ன ?

சோ. சமாச்சாரம் வேறொண்ணு மில்லெ !

[அதிகமாய் நகைக்கிறான்.]

ப. உம் ! பயித்தியம்.

சோ. பங்கஜாக்ஷி—

ப. மறுபடியும் பார் !—ஏன் என்னை அழைக்கிறாய் ?

சோ. ஒரு சமாச்சாரம்,

ப. என்ன சமாசாரம் ? சொல், சீக்கிரம்.

சோ உம் ! [நகைத்துக்கொண்டே.] எனக்கு வெக்கமா யிர்க்குது சொல்ல.

ப. ஆனால் சொல்லவேண்டாம், போ.

சோ. உம்—பங்கஜாக்ஷி—

ப. என்னடா தொந்தரவா யிருக்கிறது !—என்னதான் அது ? சொல்லித் தொலை.

சோ. நான் சொன்னா கோவிச்சிக்கமாட்டே யல்லா ?

ப. இல்லை, சொல்.

சோ. அப்படியே ஒப்புக்கணும் ?

ப. ஆகட்டும், சொல்.

சோ. என்னெ—கண்ணாலம்—பண்ணிக்கிறெயா ?

ப. என்ன !

சோ. என்னே கண்ணுலம் பண்ணிக்கிறெயா?

ப. உனக் கென்ன பயித்தியமா?

சோ. ஆமாம், உன்னெக் கண்ணுலம் பண்ணிக்கணும்ணு பயித்தியம்.

ப. ஆனுல் அந்தப் பயித்தியத்தை விட்டுவிடு.

கொம்புனற் றேனை யுண்பான் முடவனும் கொண்டு ஆசை
வெம்பியே வருந்த லுற்ற விதமெனை விழைவ தாய்
அம்புவி தன்னிற் காக்கை அனப்பெடை தன்னை வெளவி
நம்பியே மோசம் போன நகைப்புறு கதையி தாமே!
—அண்டங்காக்கை அன்னப் பக்ஷிமே லாசைப்பட்டதாம்.

சோ. ஏ! நானு அண்டங்காக்காயோ?

ப. ஆமாம், அண்டக்காகத்தைப்போல் சிகப்பா யிருக்கின்ருய்!

சோ. கறுப்பா யிருந்தா என்ன கெட்டுப்போச்சி? உம்,—உம்! காக்காயிக்கானு கறுப்பா யிர்க்கற மய்யெ நீ கண்லெ யிட்டுக்கலியோ?

ப. ஆமாம்—அட்ட கரி!

சோ. உம்,—அட்டக் கரிக்கானு கறுப்பா யிர்க்கிற சாந்தே நீ நெத்தியிலெ யிட்டுக்கலியோ? அந்த மாதிரிதான் நானு.

ப. சீ! போ!

சோ. நானு கறுப்பா யிர்க்கிறேண்ணு உனக்கு இவ்வளவு எழுத்தாளியா யிர்க்குது? நான் ஒண்ணு சொல்றேன், காபகத்திலெ வச்சிக்கோ. உன் தலமேலே யிர்க்கிறது கறுப்பா யில்லெ? அது கறுப்பா யிர்க்கற வரைக்குந்தானே ஒனக்குப் பெருமை, அது வெளுத்துப்போனு—நரெச்சிப் போனு—உன்னெயாரானு கண்ணுலம் பண்ணிக்கிறையா இணுணு கேக்கப் போருங்களா? யோசனெ பண்ணு— [சற்றுபொறுத்து] என்ன சொல்றே?

ப. சரிதான், அந்த வார்த்தையை விடு என்றேனே, மறுபடியும் என்ன? வேறு ஏதாவது பேசு.

சோ. வேறே யென்ன நானு பேசரது?

ப. அதோ, அந்தப் பண்ணை யாட்களெல்லாம் கும்பலாகத் திரௌபதியம்மன் கோயி லெதிரில் கூடி யிருக்கிறார்களே, என்னவென்று விசாரித்து வா, போ.

சோ. துரோபதெ கோவில்லெ இண்ணெக்கி உச்சவம் ஆரம்பம். அத்தொட்டு வெறியாட்டத்துக்கோஸ்ரம் கும்பல் கூடறாங்க. இந்த வர்ஸம் தடபுடல் உச்சவம்! பத்தா நாளு துரொபதெ அம்மன் கண்ணாலத்தும்போது நம்ப கொத்தவாலு ரகுவீரருக்குக்கூட கண்ணால மாம். அதுக்கோஸ்ரம் உச்சவம்கூட இந்த வர்ஸம் விஸேஷம்.

ப. அவருக்கும் யாருக்கும் கல்யாணம்?

சோ. என்ன! ஒண்ணுந் தெரியாதவபோலெ கேக்கிறியே? ரகுவீரருக்கும் மின்னே யிர்ந்த கொத்தவாலு பொண்ணு லலிதாவுக்கும்.

ப. முகூர்த்தம் எல்லாம் நிச்சய மாய்விட்டதா?

சோ. உம்—அத்தெபத்தி உன்னோடே பேசரத்துக்குத்தான் வந்தேன்.

ப. அதைப்பற்றி நீ யென்னிடம் பேசுவதாவது?

சோ. இல்லெ, அவுங்க ரெண்டுபேருக்கும் கண்ணாலம் ஆவுற போது நம்ப ரெண்டுபேரும் கூட கண்ணாலம் பண்ணிக்கிறோம்ணா நண்ணா யிர்க்காது?

ப. போதும், போதும், பயித்தியம்!

சோ. கண்ணல்லா! அவ்வளவு கோவிச்சிக்காதே.

ப. உம்!—கண்ணு மாச்சு! புண்ணு மாச்சு!

ஒருபுறம் லலிதையும், பானுமதியும் வருகிறார்கள்.

ல. அம்மா, இன்னும் அவர் வரவில்லையே!—இதோ பங்கஜாக்ஷி! பங்கஜாக்ஷி, என்பிராணநாதரைக் கண்டாயா இங்கு?

ப. இங்கு வரவில்லையே.

ல. முன்பே யிங்கு வந்து என்னைச் சந்திப்பதாகச் சொன்னாரே. ஏன் இன்னும் வரவில்லை?—பங்கஜாக்ஷி, நீயும் என்னுடன் திரௌபதியம்மன் கோயிலுக்கு வருவதாகச்

சொல்லினையே, என்ன இவ்வளவு நேரம்பொறுத்து வந்தாய், பூஜையெல்லாம் முடிந்த பிறகு?

ப. லலிதா, என்மீது வருத்தம் வேண்டாம், வருகிற வழியில் சற்று நேரமாயிற்று.

ல. ஓகோ! சோமநாதரா அது? சரிதான், வழியில் நேரமானதற்குக் காரணந் தெரியு மெனக்கு.

ப. ஆமாம், எப்பொழுது பார்த்தாலும் உனக்கு விளையாட்டு தான்.

ல. பங்கஜாக்ஷி, உன்னுடன் விளையாடாது நான் வேறு யாருடன் விளையாடுவது?—அதிருக்கட்டும்.—பங்கஜாக்ஷி, நாம் இருவரும் ஒன்ருய் வளர்ந்து வந்ததற்கு, நம்மிருவருக்கும் ஒரே தினம் கல்யாணமானல் நன்ரு யிராது? என் விவாஹத்திற்கு இன்று பத்தாம் நாள் குறித்திருக்கிறது. அன்றைத் தினமே உனக்கும் சோமநாதருக்கும் முகூர்த்தம் நிச்சயித்துவிடுகிறது தானே?

சோ. அத்தெதான் நானுஞ் சொன்னேன்.

ப. அத்தையும் சொன்னெ! பாட்டியும் சொன்னெ! போதும். உன்னைக் கலியாணம் செய்துகொண்டு விடிந்தது!

ல. என்ன அவருக்குக்குறை?

சோ. நானு கறுப்பா யிர்க்குறேனும்.

ல. இருந்தா லென்ன? அழகிலென்ன இருக்கின்றது? குணமிருந்தாற் போதாதா? அன்றியும் ஸ்ரீகண்ணபிரானே முகில் வண்ணமாகத்தான் இருந்ததாகச் சொல்லுகிருர்கள்.

சோ. அப்படி நீ கேளம்மா, எனக்கோஸ்ரம்.

ப. லலிதா! உனக்குப் பரிகாசமா யிருக்கிறதோ? இராது பிறகு? நீ யென்ன செய்வாய்? ரகுவீரரைக் கலியாணம் செய்து கொள்கிறேமே யென்கிற சந்தோஷம்!

ல. சீச்சீ! அப்படி யெண்ணதே. உண்மையாகவே கேட்கின்றேன். சோமநாதர் மிகவும் தனவந்தர். ஒன்று மறியாத நற்குண முடையவர்; பாவம்! உன்மீது உண்மையில்

இச்சைகொண்டிருக்கிறார். அவரைக் கல்யாணஞ் செய்து கொள்ள என்ன தடை?

ப. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.

சோ. எப்பவும் கன்னியாவே யிர்க்கப் போறியோ?

பா. பங்கஜாக்ஷி, இதென்ன ஒன்று மறியாத குழந்தையைப் போல் பேசுகிறாய்?

சோ. அப்றம் எங்கதி என்ன ஆவ்ரது?

விரைவாக ரகுவீரன் வருகிறான்.

ர. கண்ணே என்னை மன்னிப்பாய். நான் வருவதற்குக் கொஞ்சம் நேர மாயது.

ல. பிராணநாதா, எங்குற்றீர் இத்தனை நேரமாக?

ர. மின்னைநிகர் கொடியேயென் மீதுனக்குச்சினம்வேண்டாம்
தன்னை நிக ரில்லாதாள் தரணியிலே யெனையீன்ற
அன்னையிடஞ் சென்றிருந்தேன் அந்தவீடு கானகத்தே
உன்னையொரு உத்தமியா யெனக்களிக்க வுலகினிலே.

ல. சரிதான், பிராணநாதா.

ர. ஓஹோ! சோமநாதனும் பங்கஜாக்ஷியுங்கூட திரௌபதி கோவிலுக்கு வந்தார்களா? அவர்களுக் கெப்பொழுது கல்யாணம்?

ல. அதைத்தான் நானும் கேட்டுக்கொண்டிருந்தேன்:

சோ. அத்தெதான் நானுங் கேட்டுக்கி னிருந்தேன்.

ர. ஏன் பங்கஜாக்ஷி? எப்பொழுது உனக்குக் கலியாணம்?

ப. நீருமிவ ருடனேநேர் நின்றேள னஞ்செயவோ
நேர்ந்த திந்தப்
பாரினில் யான் பிறந்திட்டேன் பாவையெனப்
பாவியேன் பதறு முள்ளம்
யாருமறி யாவிடினும் யாவரையுங் காத்தளிப்போ
னறிவான் யானுங்
கோரியவவ் வண்ணமென்றுட் கன்னியெனக்
கழித்திடுவேன் குவல யத்தே.

—நான் வருகிறேன்.

ர. பங்கஜாக்ஷி! போகாதே, நில். என்மீது கோபியாதே. தங்கை முறை கொண்டு விளையாடினேன். வா இப்படி. எல்லோரும் சந்தோஷமா யிருக்குஞ் சமயத்தில் உனக் கேன் வருத்தம்?

ப. [தனக்குள்] ஆம், எனக்கென்ன வருத்தம்! அவ்வளவாவது கூறினீரே! [உள்ளே சத்தங் கேட்கிறது]

ல. பிராணநாதா, என்ன சப்தம் அது?

ர. கண்ணே, ஒன்றும் அஞ்சாதே. யாரோ பெரிய மனுஷ்யர் தன் பரிவாரங்களுடன் வருகிறார்.

தன் பரிவாரங்கள் சூழ ராதாப்பிரியன் வருகிறான்

ரா. [பரிவாரங்களுக்கு] நில்லுங்கள் இங்கேயே; இவர்களைக் கேட்டுப் பார்ப்போம்.—ஐயா, கோவிந்த நகரத்திற்கு இன்னும் எத்தனை காதம் இங்கிருந்து?

சோ. நேரா போனா பத்து காதம்.—ஆனா குறுக்கு வழி ஒண்ணு இருக்குது.

ரா. அப்படிச் சென்றால்?

சோ. அப்டி போனா பன்னெண்டு காதம்.

ர. ஐயா, தாங்கள் இனி கோவிந்தநகரம் இன்றுபோய்ச் சேர்வது அசாத்தியம். இப்பொழுதே யிருட்டிவிட்டது. இன்று இங்கே தங்கியிருந்து, நாளைத்தினம் விடியுமுன் புறப்பட்டுப் போகலாம்.

ரா. நான் எங்கு தங்குவது இன்றிரவு?

ப. ஐயா, இந்நாட்டை யாளும் அரசருடைய தந்தை கட்டிய சத்திரம் ஒன்றிருக்கிறது அதோ, அங்கே தாங்கள் தங்கி யிருக்கலாம்,

சோ. [ஒருபுறமாக பங்கஜாக்ஷியுடன்] ஏ! அவரெ என்னாத்துக்கு அங்கே வரச் சொல்றே!

ர. என்னுடைய சிறு வீடு ஒன்றிருக்கிறது, அதில் தாங்க ளிருக்க விருப்பமானால் தங்கியிருக்கலாம்.

ரா. ஆ! இது கோபாலபுரமா?—ஓ! ஞாபகமிருக்கிறது. முன் னாளில் முழந்தாளிட்டு நான் ஆடிய முற்றம் அதோ

தோற்றுகிறது! அந் நாளில் சிறு செடிகளாயிருந்தன வெல்லாம் இந்நாளிற் பெரு மரங்க ளாயினவே!

பா. ஐயா, தாங்கள் யாரோ தெரியவில்லை. இந்த ஊரெல்லாம் உமக்கு நன்றாய்த் தெரியும்போ லிருக்கிறதே.

ரா. ஆம் அம்மா; நான் சிறுவனா யிருந்தபொழுது இங்கே விளையாடியிருக்கிறேன்.

'சென்றநாள் நினைந்துருகிச் சேர்ந்திட்ட பயனென்னாம்?
நின்றநாள் நல்வழியே நேர்ந்திடா முந்துவமே.'

ஐயா, இன்று தமது வீட்டிலே தங்கிச் செல்கிறேன். தாம் என்ன மணக்கோலங் கொண்டிருக்கிறீரே! மிகவும் சந்தோஷம். நற் சமயத்திற்றான் நானும் வந்தேன். எங்கே கல்யாணப் பெண்? தம்பதிகளை நான் ஆசீர்வதிக்க வேண்டும்.

பா. ஐயா, இதோ நிற்கிறாள், இன்னுங் கல்யாணம் ஆகவில்லை. இன்றைக்குப் பத்தாம் நாள் கல்யாணம். இன்றைக்கு அம்மன் பூசைக்கு இங்கு வந்தோம்,

ரா. இப் பெண்மணியா?—ஆ! ஐயா இப்பெண்மணியை உமது மனைவியாகப் பெற்றது உமது பாக்கியம். அப்பாக்கியத்தைக் கைவிடாது காப்பீர்.

ர. ஐயா, அப்படியே ஆகட்டும்.

ப. [ஒருபுறம் ரகுவீரனுடன்] என்ன, நிரம்பவும் புகழ்கிறார் போலிருக்கிறது லலிதையை!

ர. புகழ்ந்தா லென்ன?

ப. ஒன்று மில்லை.

ரா. அம்மா,

மின்போலு மிடையாயிம் மேதினியி லடியேனும்
நின்போலோ ருத்தமியை நேடினனால் கைப்பிடிக்க
என்பாவி மனதிரங்கி யிவணேங்க விட்டவளும்
தென்பாலி னுதனையே தேடியுடன் சென்றனளே.

ப. அப்படி யென்றால் அர்த்த மென்ன?

ர. லலிதையைப் போன்ற ஒரு பெண்மீது தான் காதல் கொண்டிருந்ததாகவும், அப்பெண் காலகதியால் மடிந்ததாகவும் கூறி விசனப்படுகிறார், பாவம்!

ப. உம்!—லலிதையைப் போன்ற—பெண்ணோ?

சோ. சரி, சரி! நேர மாச்சி; இருட்டிப் போச்சி! இங்கே உக்காந்துக்கினு பாடிக்கினு கீடிக்கினு இர்ந்திங்களா அப்ரம் அந்தப் பிசாசி யிங்கே வந்துடும்!

ரா. அதென்ன பிசாசு?

ப. பிசாசு மில்லே, ஒன்று மில்லே.

பா. இல்லே, யம்மா. அது பொய்யா யிராது. நானும் கேள்விப்பட்டேன். சில தினங்களாக இந்த ஊரில் வெண்பட்டுடுத்த ஏதோ பிசாசு ஒன்று உலவுகிறதாகவும், அதைப் பலர் கண்டதாகவும் கூறுகிறார்கள். அது பொய்யா யிருக்குமா?

சோ. நேத்துக்கூட நான் பாத்தேன். நம்ப லலிதாவெப் போலெயே யிருந்தது.

ப. [ஒரு புறம் சோமநாதனுடன்] சீ! பேசாம லிரு.

ரா. அந்தப் பிசாசை யின்றிரவு நான் பார்க்க விரும்புகிறேன்.

சோ. இங்கேயே நிண்ணுக்கு னிருந்தா பார்க்கலாம்.

பா. லலிதா, நமக்கு நேர மாகிறதே.

ல. அம்மா, நீர் போம் முன்பு—நான் இதோ வந்துவிட்டேன்.

ரா. ஆம், நேரமாகிறது. நான் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் வருகிறேன். [லலிதையுடன்] அம்மா, நான் வருகிறேன்.

[பரிவாரங்கள் சூழ ராதாப்பிரியனும், சோமநாதனும், பானுமுகியும், பங்கஜாட்சியும் போகிறார்கள். ரகுவீரனும் போக முயலுகின்றான்.]

ல. [ரகுவீரனைப் போகவிடாமல் கையைப் பிடித்துக்கொண்டு] பிராணநாதா!

ர. என்ன?—எல்லோரும் போய்விடுகிறார்கள். நேரமாய் விட்டது.—நீ மாத்திரம் இங்கே தனியாகவா இருக்கப் போகிறாய்?—நீ யிருப்பதானால் இரு—

ல. பிராணநாதா, என் மீது கோபமா?

ர. உன்மீது ஏன் கோபம்?—நான் வருகிறேன்.

[போக முயல்கின்றான்.]

ல. [ரகுவீரனைத் தடுத்து] பிராணநாதா, பிராணநாதா! என் மீது என்ன கோபம்? நான் ஒன்றும் அறியேனே! இன்ன காரணமென்றாவது சொல்லுமே! திடீரென்று கோபம் வந்த காரணமென்ன?—

ர. இப்பொழுது வந்தவர் யார் தெரியுமா உனக்கு?

ல. தெரியாதே!

ர. இதற்குமுன் அவரைப் பார்த்திருக்கிறாயா?

ல. இல்லையே!

ர. மிகவும் அன்யோன்யமாய்ப் பேசினரே உன்னிடம்! போகும்போதும் உன்னிடம் சொல்லிவிட்டுச் சென்றனரே!

ல. ஐயோ!—பிராணநாதா, இதிலென்ன தவறு? எப்படியிருந்தபோதிலும், பிராணநாதா, உமக்கு என்மீதி லேன் சந்தேகம்? இப்படி யென்னைப் பரிசோதிக்கின்றீரா, அல்லது பரிஹாசமா உமக் கிது? நான் ஏதாவது கனவிலும் எண்ணுவனோ உமது மனத்திற்கு விரோதம்?

ர. கண்ணே, என்னை மன்னிப்பாய்! ஏதோ மறந்தாற்போல் கோபங்கொண்டேன்.—வருந்தாதே, கண்ணல்ல!

ல. இனி யென்ன வருத்தம் பிராணநாதா?—பிராணநாதா, ஆயினும் இனிமேல் இம்மாதிரி எப்பொழுதும் என்மீது சந்தேகிப்பதில்லை யென்று சத்தியம் செய்துகொடும்.

ர. அப்படியே, கண்ணே! இனி யுன்மீது நான் சந்தேகமே கொள்வதில்லை, சத்தியம் இது.

ல. சந்தோஷம், வாரும் போவோம், நாதா, நேரமாய்விட்டது. வீட்டில் தாயார் என்னமோ ஏதோ என்று வருந்திக்கொண்டிருப்பார்கள்.

ர. ஆம், ஆம்; சீக்கிரம் போவோம், வா.

[இருவரும் போகிறார்கள்]

## முதல் இடைக் காட்சி.

இடம்—களத்துமேடு. காலம்—மாலை.

சாமன், வெங்கன், ஆசிகான், நாராயணன், கோபாலன், தப்பன், வேம்பிலி முதலிய குடியானவர்கள் கும்பலாய்க்கூடி கோஷ்டமாய்ப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

சா. அடே எல்லாம் வளவள இண்ணு கூச்சே போட்டா, வெவாரம் என்னமாடா ஒய்ங்காவரது?

மற்றெல்லோரும். அத்தெ தான் நானும் சொல்ரேன்.

சா. நான் சொல்ரத்தே கேளுங்க, இப்பொ என்னமோ, நம்ப கொத்தவாலையா வயக்கத்தெப் போலே, துரோபதியம்மன் உச்சவத்துலே கடைசி நாளு கூத்துபோட உத்ரவு கொடுத்திருக்குறுரு. இப்பொ என்னுண்ணு, என்ன கூத்து போட்ரது இந்த வர்சம்?

மற்றெல்லோரும். அத்தாம் தீர்மானம் பண்ணனு ஒக்காந்து. [உட்காருகிறார்கள்.]

வே. அடே! நான் சொல்ரத்தெக் கேளுங்க, அல்லாரும் பேசனு ஒரு வெவாரமும் அருது. நானு ஒர்த்தர் ஒர்த்தரா கேட்டுக்கினு வர்றேன், உங்கோ மனசே சொல்லுங்க.

மற்றெல்லோரும். ஆமாம், ஆமாம், கேளு வெரிசயா.

வே. அடே, நீ சொல்லு என்னு கூத்து போடலாம்?

ஆ. இந்த வர்சம் துரோபதி சூம்வரம் போட்டா நண்ணு யிர்க்கும்.

கோ. போடா! அத்தாம் போன வர்சம் போட்டோமே, அத்தெயே என்னுத்துக்குப் போட்ரது? இந்த வர்சம் நல்ல நாடவமா போடணுமிண்ணு கொத்துவாலையா சொல்லியிர்க்கறுரு—நான் என்னு சொல்ரேண்ணு—பக்கத்து ஊர்லே ஒரு கூத்து போட்டாங்க—நண்ணு இர்ந்துதடா அது,—அது—அதும்பேரு காபத்துக்கு வர்லே, நல்ல பேருடா—தொப்பெ கூத்தாடி என்னு ஆடனுன் தெரியுமா அதுலே—ஆ! ஆ! காபகம் வந்தது—வள்ளிமீன் நாடவம்.

சா. தென்னுது! வள்ளிமீன் நாடவமா! அதென்னுதுடா அது?

கோ. அதாண்டா, வள்ளிமீனுக்கும், சாமி புள்ளே, சுப்பிர மணிய ஐயருக்கும் கண்ணுலம் ஆவுதே கடாசிலே—

நா. வள்ளி அம்மெ நாடவமா?—போடா!—அது நண்ணு இர்க்காது, நானு கூட பாத்தேன்—கதெ நண்ணுயில்லெ.

வெ. ஆனு, நீ சொல்லு, என்னு கூத்து போடலாம்?

நா. நான் ஒரு நாயம் சொல்ரே, உச்சவம் என்னமோ, துரோபதி அம்மன் கோவிலு உச்சவம், அத்தொட்டு துரோபதி அம்மென் துவில் போடலாம்.

சா. அப்டி இண்ணு?

நா. அதாண்டா, துரோபதி அம்மென் உசுரோடே இர்க்கும் போது, நூறுபொடவெ கட்டிக்கினு வருது, அத்தெயெல் லாம் சவதம் போட்டுக்கினு அவுக்கரானே பீமசேனே— மண்டிபோட்டு—

ஆ. போடா! பலே தெரிஞ்சவ! பீமசேனன்தா அவுக்க ரானே? பீமசேனன்தா சண்டெ போட்ரானே!

நா. பின்னெ யார்டா அவுக்கரது?

ஆ. பீமசேனெ எதிரி, கர்ணே.

வெ. போடா, போடா! ரொம்ப தெரிஞ்சவன்தா!—தெரி யாப்போனு வாயெ மூடிக்கினு பேசாதிர்க்கறதுதானே; இப்டி யாரு ஒளரச்சொன்னு இண்ணெ?—துரோபதி யம்மென் துவிலே உறிஞ்சவன் ததியோதனே—இது தெரி யாதே பேசுரான்!—இவங்கல்லாம் நாடவ மாடணுமாம்! —அது போனுப் போவட்டும்—சும்மா பேசி உட்டைங் களே—நூறு பொடவைக்கி நம்போ எங்கோ போரது?— கூத்து ஆடரது இண்ணு ஒரு பொடவெ ஆப்புடரதே கஷ்டமா யிர்க்குதே, நூறுபொடவெக்கி எங்கேடா போரது?

சா. அதெல்லாம் வாணும்—அடே வாத்தியாரே, நீ எல்லாம் தெரிஞ்சவ, நீ சொல்லு என்னு கூத்து ஆடலாமிண்ணு, நாங்க ஒப்புக்ரோம், போனவர் சத்துப்போலே.

மற்றெல்லோரும். ஆமாம், ஆமாம்!

வே. நான் ஒரு பேச்சு சொல்ரே, பக்கத்து ஊரு நட்டுவன் இருக்கிறானே சாமிநாதன், அவன் புதுசா ஒரு நாடவம், தரு பாட்டு கீட்டு எல்லாம் போட்டு, எய்தியிர்க்கறுன். அத்தே நானு மொள்ளமா பாத்தூட்டுத் தர்ரேன் இண்ணு சொல்லி தபாய்ச்சிக்கினு வந்தூட்ரேன். அந்த நாடவம் ஆடுணு மிண்ணு, ரொம்ப நண்ணுயிர்க்கும் இண்ணு என் இஸ்டம்.

மற்றெல்லோரும். ஆமாம், ஆமாம்! அப்படியே செய்வோம்.

ஆ. ஆமாம், அது என்ன நாடவம்?

வே. அதும் பேரு, அர்ஜூனன் தவுசு! நானு கதயேகூட கேட்டேன், நண்ணு இர்க்குது.

ஆ. அதுலே துரோபதி அம்மன் வருதா?

வே. இல்லெ.

ஆ. ஆறு, அது என்ன நாடவம்? நண்ணு யிர்க்காது.

கோ. போடா! இவனுக்கு எப்படியாவது போன வர்சத்தெப் போலே, துரோபதி அம்மன் வேசம் கட்ணுமிண்ணு ஆசே. அதுக்குத்தான் இவ்வளவு ஆச்சேபனெ யெல் லாம் சொல்ரான்.

நா. அதெல்லாம் இர்க்கட்டுண்டா, மின்னெ கதெயெ கேப் போம்.

மற்றவர்கள். ஆமாம், ஆமாம்!

வே. கதெ எனக்கு நண்ணு காபகம் இல்லே முழுமெயும், நா ளேக்கி அந்த ஓலே எட்டே எடுத்துக்கினு வந்து அல்லாம் படிச்சிக் காம்பிக்கரே.

கோ. காபகம் இர்க்கர வரெக்கும் சொல்லேன்.

வே. சொல்லட்டுமா—இந்த பஞ்சபாண்டவங்க இர்க்கராங்களே அவுங்க காட்லே இருக்கும் போது—

ஆ. கூட, துரோபதி இல்லியோ?—பலே கதெ தெரிஞ்சவ!—

நா. அடே! என்னுடா எய்வா இர்க்குது! கதெயெத்தான் சொல்லியழட்டுமே—

வே. இந்த பஞ்சபாண்டவங்க காட்லே இர்க்கும்போது—

சா. பஞ்சபாண்டவங்க இண்ணு எத்தினி பேரு?

கோ. இவன், எங்கடா நடுவுலே வந்தா? பஞ்சபாண்டவங்க, இண்ணுகூடவா தெர்யாது? பஞ்சபாண்டவங்கோ இண்ணு நாலுபேரு—தர்மராசா, பீமன், அர்ஜுனன், கும்ப கர்ணன்—

நா. போடா? புத்திசாலி?—கும்பகர்ணெ எங்கேடா வந்தா? பஞ்சபாண்டவங்க, இண்ணு, மூணுபேரு—யமதர்மராசா, வீமன், அர்ஜுனன்.

சா. ஆனு, அந்த நாடவம் ஒதவாது. நம்ப கிட்ட ரெண்டு புஜ கிருதிதானே இர்க்குது.

வே. அதெல்லாம் பரவாயில்லே, இந்த நாடவத்துக்கு, தர்ம ராசா அர்ஜுனன்தான் வோணும்; பஞ்ச பாண்டவங் களே நம்போ ரெண்டுபேராக்கி உடலாம்.

சா. அடே, அதெல்லாம் போனுப் போவுது, இந்தப் பஞ்ச பாண்டவன் என்னு செய்தான் காட்லே? வேட்டே ஆடப் போனுனு?

வே. இல்லெடா! ததியோதனனும் அவன் தம்பிமாரும் நூறு பேரும் கூடிக்கினு, பஞ்சபாண்டவங்களே காட்டுக்கு தொ ரத்திட்டாங்க—அவுங்க ஊரே புடிங்கிக்கினு.—அப்போ அவுங்க, காட்லே இர்க்கும்போது, ஒரு ரிசி வந்து, சாமியே பாத்து தவுசு பண்ணு, ஒரு பாணம் கொடுப்பாரு, பாசு பதார்த்தம் இண்ணு அதும் பேரு—அந்த பாணம் இர்ந் தா, இந்த நூறு பேரெயும், ததியோதனே அவன் தம்பி மாரு எல்லாரெயும், கொண்ணூட்டு, உங்க ஊரே வாங்கிக் கலாம் இண்ணு ரவுஸ்யம் சொல்லிக் கொடுக்காரு. உடனே யமதர்மராஜா, அர்ஜுனனே, நீதான் தவுசு பண் ரத்துலெ கெட்டிக்காரன், நீ போயி தவுசு பண்ணு இண்ணு அநுப்பிக்கிராரு, யாரெ?—அர்ஜுனனே. அவன் அப் டியே ஆவுட்டு மிண்ணு, சாமிகிட்ட போயி, நெருப்பிலே நிண்ணிக்கினு, ரொம்ப தவுசு பண்ரா, ரொம்ப வர்சம்—

சா. அதென்னமாடா பண்ரா? நெருப்லே அரெ நாழி நிண்ணு சாம்பலாப் பூடமாட்டானு?

கோ. பேசாதெ இர்க்கமாட்டேடா நீ? குறுக்கே குறுக்கே பேசிக்கினு—

வே. அல்லாம் கதெதானேடா?—அப்றம் சாமி வர்ராரு எதிர்க்க—இல்லே இல்லே! நடுப்புற மறந்துப்பூட்டனே—அர்ஜுனனே தவுசு பண்றப்போ—நானு தேவ இஸ்திரீயுங்க வந்து, அவனெ கெடுக்கப் பாக்கராங்க; அவன் ஒரே மூட்டா தவசு பண்ரா—இவங்களெ திர்ம்பிக்கூட பாக்காதே—

சா. கண்ணெ மூடிக்கினு தவசு பண்ணு; இஸ்திரீயுங்க என்ன மாத்தெரியும் அவனுக்கு?

வே. கண்ணெத் தறந்துக்கினுதாம் தவசு பண்ரா!—அப்றம் சாமி வர்ராரு—உம் உம்!—இதுக்குள்ள ததியோதனே இரக்கரானே—இந்த சமாச்சாரம் என்னமாவோ தெரிஞ்சிக்கினு, ஒரு ராச்சசனே அனுப்பிக்கரா—அர்ஜுனனெ கொண்ணூட, அவன் ஒரு பண்ணியப்போலெ வேசம் போட்டுக்கினு வர்ரான். அப்போதான் சாமி ஒரு வேடனூட்டம் வேசம் போட்டுக்கினு வந்து, அந்த ராச்சசனே கொண்ணுட்ராரு—அந்த பாசுபதார்த்தத்தாலே, அப்றம் அர்ஜுனே அந்த பாணத்தெ கேக்கரான். கொடுக்கமாட்டேன் இண்ராரு வேடிக்கைக்கி.—அப்றம் ரெண்டு பேரும் சண்டெ போட்ராங்க. கடாசியிலே சாமி, பாவம் இண்ணு சொல்லி, அந்தப் பாணத்தெக் கொடுத்துட்ராரு.

ஆ. அந்த தேவ இஸ்திரியிங்க என்னமா போனுங்க?

வே. அவுங்களா?—மறந்துப் பூட்டேன்.—அவுங்க போயி தேவயந்திரங்கிட்ட தங்க ஜெபம் சாயலே இண்ணு சொல்ராங்க. அப்போ தேவயந்திரன் வந்து அர்ஜுனனே தன் ஊருக்கு இட்டுக்கினு போரான். அது வரெக்கும்தாம் நானு கேட்டேன். அப்றம், இன்னும் போவுது நாடவம்.—ஒரு ராத்திரி யெல்லாம் ஆடலாம்.—

கோ. அடடே! நண்ணு இர்க்குதடா கதே, இத்தெயே ஆடலாம்.

கு. ஆமாம், இதுலெ தொப்பக் கூத்தாடி வர்லியே?

வே. ஏ! வர்ரான், வர்ரான்! முதலேம் புடிச்சிக்கினு கடாசி வரெக்கும் வர்ரான். அவசியபாகம்கூட நண்ணாயிர்க்குது-அது படிச்சாக்காத்தான் தெரியும்.

கோ. ஆனா இப்பொ ஒடனே போயி நீ அந்த ஓலெக் கட்டெ தூக்கிக்கினு வந்தூடு.

ஆ. — ஆமாம், கதெ என்னமா முடியுது? கடாசியிலே அர்சுன இந்த இஸ்திரியிங்களெ யெல்லாம் கண்ணாலம் பண்ணிக்கிரானா?

வே. அதெல்லாம் நாடவத்தே பாத்தாதான் தெர்யும். நானு எப்படியாவது நாளெக்குள்ளே அதெ அமுக்கிக்கினு வந்தூட்ரேன்.

நா. அப்பொ, நாளெக்கி எல்லாரும் சாயங்காலம் இந்த வெடத்திலே வந்து சேருவோம். அப்போ நாடவத்தெ யெல்லாம் படிச்சிப் பாத்து, யாரு யாரு எந்த எந்த வேசம் கட்ரது இண்ணு தீமானம் பண்ணி, நாளெ நெண்ணைக்கி ஒத்திகெ ஆரம்பம் பண்ணலாம்.

வே. ஆமாமாம், பொயுது போச்சி, ஊட்டுக்குப் போவோம். இன்னும் இர்ட்டிப் போனா அந்த வெள்ளெப் பிசாசி வந்தூடும்.

மற்றவர். ஆமாமாம், சீக்ரம் ஊடு போயி சேருவோம்.

[விரைந்து போகின்றனர்.]

காட்சி முடிகின்றது.

# இரண்டாம் அங்கம்.

இடம்—ஒரு வீடு. காலம்—இரவு.

ஒரு படுக்கையருகில் பங்கஜாட்சி நின்றுகொண்டிருக்கிறுள்.

ப. அப்பொழுதே எனக்குச் சந்தேக மிருந்தது !—உம்—இப்பொழுது இளவரசர் என்னை மணம் புரிவாரானல் இந்த லலிதையின் கர்வத்தையும், ரகுவீரனுடைய ஆணவத்தையும் அடக்குவேன் அரை க்ஷணத்தில் ! இளவரசரின் மனைவியாய் இந்நாட்டு அரசியு மாவேனுயின், ரகுவீரன் என் சொற்படி நடக்கவேண்டியதுதானே ! லலிதை எனக்குப் பணிப் பெண்ணுக இருக்கவேண்டுமென்று நான் கோரினல் அதற் குடன்படவேண்டியதுதானே !

அப்போது வென்னுரிய வாளுகையி னுட்பட்டு
விப்போது விறுமாந்த இரகுவீர னவமதிப்பு
மூப்போது மெனைத்தொடரு மூர்க்கன்செய் தொந்திரவு
மெப்போதுந் தொலைந்தனவா யினிக்களிப்போ டிருப்
[பேனே

முதலில் இளவரசர் என்னை மணம்புரியும் வகையைப் பார்க்கவேண்டும்.—வருகிற வழியில் இரண்டு மூன்று முறை என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தார் !—என்மீது இச்சைகொண்டிருக்கிறுர் என்பதற்குச் சந்தேக மில்லை.—இளவரசர் ஏன் இன்னும் வரவில்லை ?—வேறு யாராவது என்னை இங்கு பார்த்துவிடப்போகிறுர்கள்?—இந்த மூண்டம் வந்து விட்டாலும் வந்துவிடும் நம்மைத் தேடிக் கொண்டு—

பின்புறமாக சோமநாதன் வருகிறுன்.

சோ. ஏ ! நானு மூண்டமோ !—

ப. யார் அது ? என்ன சமாசாரம் ?

சோ. நீ என்ன சமாச்சாரம் ? இங்கே என்ன செய்ரே ராத்ரி வேளெயிலே ?

ப. நீ என்ன கேட்கிற தென்னை ?

சோ. ஓ ! அப்டியா சமாச்சாரம் ? அவ்வளவுக்கு வந்தூட்டையா ? நான் போய் எல்லாரோடவும் சொல்ரே.—

ப. [அவனைத் தடுத்து] உம் ! வா இப்படி ! என்பேரில் நீ கோபித்துக் கொள்ளலாமா ? இவ்வளவுதானே, இதோ பார்.

சோ. [சிரிப்புடன்] ஏ ! ஏ! கோவ மில்லே—ஆனாலும் நீ இங்கே என்னாத்துக்கு ஒண்டிமா வந்திர்க்கறே ?

ப. ஸ் ! மெல்லப் பேசு ! கத்தாதே—யாராவது கேட்கப்போகிறார்கள்.

சோ. [உரத்த சப்தமாய்] பின்னே சொல்லு மின்னே !

ப. [அவன் வாயை மூடி] இளவரசருக்கு முதலில் நல்வரவு கூறலாமென்று வந்தேன்—

சோ. ஓகோ ! அதெல்லாம் தெரியு மெனக்கு ! நீ பொம்மனாட்டி தனியா வந்து சொல்ரதோ ? அல்லாரும் வர்ராங்களே அவங்களோடே வர்ரதுதானே ? எனக்கு என்னமோ சந்தேவமா யிர்க்குது ! நான் போய் ரகுவீரரோடே சொல்விடரேன்.

ப. ஏ ! ஏ ! இப்படி வா, நான் சொல்லுவதைக் கேள். இப்பொழுதே இவ்வளவு கோவித்துக் கொண்டால், பிறகு உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டால், எவ்வளவு கோபித்துக் கொள்ளுவாயோ ?

சோ. ஆனா முன்னே என்னெ கண்ணாலம் பண்ணிக்கிறேன் இண்ணு ஒப்புக்கோ, இல்லாப்போனா எல்லாரோடவும் போய் சொல்லிடுரேன்.—என்னா சொல்லரே ?—இதோ போரேன் ஆனா—

ப. ஆ ! ஆ !—ஆகட்டும், ஆகட்டும் அப்படியே.

சோ. சத்தியம் பண்ணிக்குடு ஆனா—

ப. ஆ—சத்தியம்தான்—

சோ. உம்—ஆனா—நீ ஏன் இங்கே இர்க்கிறே ?—என்னோடே வந்தூடு—

ப. அப்படி யல்ல—உனக்கு இவ்வளது தெரியவில்லையே ! நான் ஏன் இங்கே வந்திருக்கிறேன் தெரியுமா ? இளவரசர் இங்கிருந்து தானாக லலிதையின் விவாஹத்தை

முடித்துவைக்கப் போகிறாராம்.—அந்தக் கலியாணத்துடனே நம்முடைய கலியாணமும் ஒன்றாக முடித்துவிட்டால் மிகவும் நலமா யிருக்கும், உனக்கும் செலவி சுலபமாகப்போய்விடும் —

சோ. ஆமா, ஆமா! அப்படியே கேளு—

ப. அதோ இளவரசர் வருகிறார்போ லிருக்கிறது, நீ போ வெளியே.

சோ. நானும்கூட இர்ந்து கேக்கரனே?

ப. சே! அது நன்றா யிராது, நீ போ—சொன்னபடி செய், இப்பொழுதே என் சொற்படி கேட்கமாட்டேன் என்கிறாயே, உன்னைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு நீ எப்படிக் கேட்கப் போகிறாயோ?

சோ. ஓ! உன்னெ கண்ணாலம் பண்ணிக்ண, நீ சொல்ரபடி நான் கேக்கணுமோ?

ப. கேட்க வேண்டாமோ?—ஆனால் உன்னைக் கலியாணம் செய்துகொண்டாற்போல்தான் நான்!—

சோ. இல்லெ, இல்லெ அப்புடியே!— [போகிறான்.]

ப. அப்பா! ஒழிந்தது பிசாசு.

மறுபடியும் சோமநாதன் வருகிறான்.

சோ. உம்—பிசாசா! யார் பிசாசு? நானா?

ப. உம்—உன்னைச் சொல்லுவேனா அப்படி?

சோ. பின்னே யாரெ சொன்னே?

ப, ஒரு வேளை நான் தனியாயிருக்கிறேனே அந்தப் பிசாசு இங்கே வந்தால் என்ன செய்வது என்று யோசித்தேன்.

சோ. ஆனா உனக்குத் தொணெயா இங்கே இர்க்கட்டுமா நானு?

ப. அப்படி யல்ல, பிசாசு இங்கே வருவதானால் அதோ அந்த வாசற்படியின் வழியாகத்தானே வரவேண்டும்; அங்கே போய் ஜாக்கிரதையாய் வரவொட்டாமல் காத்துக்கொண்டிரு, இளவரசரைமாத்திரம் உள்ளே விடு, தெரியுமா?

சோ. அப்டியே ஆவுட்டும்.— [போகிறான்.]

ப. போ சீக்கிரம்—
அதோ இளவரசர் வருகிறார்போ லிருக்கிறது. நாம் பாடிக் கொண்டிருப்போம்.

ராகம்—பியாகடை, தாளம்—ரூபகம்.

பல்லவி.

கண்மணியே என் சுவாமி இன்னும்வரக் காணேனடி
கனவிலும் மறவேன் அடிமானே. (க)

அநுபல்லவி.

மன்னன் எங்கள் உமைபாலன்
மாதவர்கட் கனுகூலன்
மைந்தன் சபா பதி மால்தரு
சுந்தரனை அழைத்துவா போடி. (க)

சரணம்.

எத்தனைமோடி என் சுவாமிசெயும்
வித்தைகளென்னென்று சொல்வேன்
சித்தஜன் வந்து மெத்தவுமெனை
எத்துரா னடிமானே
மெத்தையிற் படுத்தாலு மென் கண்
நித்திரையோ வருவதில்லை
இத்தனை கோப மேற்குமோ தான்
ஏந்திழைநான் ஏதுசெய்வேன். (க)

ஒரு புறமாக ராதாப்பிரியன் வருகிறான்.

ப. யார் அது?—என்ன சமாசாரம்? தாம் என்னைத் தேடி வந்த காரணம் என்ன?

ரா. நான் தப்பிதம் செய்தேனா என்ன?—இதுதானே எனக்கு ஏற்படுத்தப்பட்ட விடுதி?

ப. ஆ! ஆ! கெட்டேனே! ஆம், ஆம்!—நானன்றோ தப்பிதம் செய்தேன்? இது எனக்கு நியமித்த அறையென்றெண்ணி ஏதோ ஞாபக மறதியாய் இங்கு வந்து உட்கார்ந்துவிட்டேன். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும், அரசே!

ரா. அரசே!—ஒகோ! கெட்டது காரியம்! நான் அரசன் என்று உனக்கு யார் கூறியது?—என்னை யேன் அரசென்றழைக்கின்றாய்?

ப. முகத்தினகத் தழகெனவே
மூதுணர்ந்தோர் மொழிபோனின்
முகத்தினைநேர் நோக்காமே
முன்னுணர்ந்தே னின்னகத்தை
ஜெகத்திடைக்குப் பையின் மீதுஞ்
சீர்பெறுமா ணிக்கமின்
மகத்துவம்போ மோமன்ன
மற்றெவ்வே டத்தினுமே.

நான் அப்பொழுதே தெரிந்துகொண்டேன், இனி ஒளிப்பதிற் பய னென்ன?—எல்லோருக்கும் தெரிந்துபோய் விட்டது; இப்பொழுது தங்களுக்குக் கிராம மரியாதை செய்யவேண்டி எல்லாம் சித்தம் செய்கிறார்களே!—

ரா. ஐயோ! இதை யெல்லாம் தவிர்க்கவேண்டியே நான் இன்றுனென வெளியிடாது வந்தது!—சரி! இனி யென்ன செய்வது?—

ப. அரசே, நான் அறியாமல் தமது அறைக்கு வந்ததற்காக மன்னிக்கவேண்டும்.

ரா. அப்படி யன்று, நா னல்லவோ உன்னை மன்னிப்பு கேட்க வேண்டும் நீ சுகமாய் பாடிக்கொண்டிருந்ததைத் தடை செய்ததற்காக?

ப. ஆம்! என் பாட்டை யார் கேட்கின்றார்கள்?

ரா. அப்படி யல்ல.

மாவினிய குயிலேநான் மகிழுவனே குழலிசைமின்
நாவினிய கீதமென்றன் செவிக்கமுத நல்கிடவே.

இன்னும் சற்று ஏதாவது பாடு கேட்போம்.

ப. அப்படி யல்ல, அரசே!—நா னினி தனித்துத் தம்முடன் இருப்பது நியாய மன்று. உலை வாயை மூடினாலும் ஊர்

வாயை மூட லாகாதென்று, பேச்சுக்கிடமாகும்—எனக்கு உத்திர வளியும்.

ரா. பங்கஜாட்சி, அப்படி ஒன்றும் சொல்லமாட்டார்கள் ஒருவரும்.—ஒருவேளை சோமநாதருக்குமாத்திரம் கொஞ்சம் பொறுமையால் அப்படித் தோற்றலாம்.

ப. அரசே! தாமும் மற்றவர்களைப்போல் என்னை ஏளனம் செய்கிறீரோ?

ரா ஏளனமாவது! ஆனல் நீ சோமநாதரை மணம்புரியப் போகிற தில்லையோ?

ப. நான் மடிந்தாலும் அவரை மணப்ப தில்லை!

ரா. பிறகு என்ன செய்யப்போகிருய்?

ப. நான் கன்னிகையா யாவது என் ஆயுளைக் கழிப்பேன்.

ரா. ஏன் அப்படி?

ப. அப்படித்தான்.

ரா. என்ன காரணம்? என்னிடம் கூறமாட்டையா?

ப. கூறி என்ன பயன்?

தருச்சினைத் தாங்குந் தீன்றேன்
  தருக்கொடு முடவ னுண்பான்
விருப்புறல் போலோர் நாதன்
  மீதியான் விழைந்தி ருக்க
ஒருத்தனிப் பரனே வந்து
  வோதினு மிதற்கு மாருய்த்
திருத்தகக் கொண்ட வெண்ணந்
  திலமுனைப் பிறழு வேனே.

ரா. அப்படிப்பட்ட நாதன் யார்?

ப. சொல்லி என்ன பிரயோஜனம்?

ரா. சொல், பிரயோஜனத்தைச் சொல்கிறேன்.

ப. சொல் லென்கிறவர்தான் —

ரா. நினைத்தேன், அம்மா!

மூன்றா ளெனதுயி ரன்றா ளுக்கென
முழுமனதோ
டென்னை ரினுமவ ளலவே றேந்திழை
யெண்ணுகிலே
னென்று திறன்மொழி சொன்னே னவண்முடி
வெய்தினளால்
கொன்னே யம்மொழி கடவே னெனையுளங்
கொள்ளேனீ.

[உள்ளே சப்தம் கேட்கிறது.]

அது என்ன சப்தம் ?—

ஐயோ ! யாரோ வருகின்றார்போ லிருக்கிறது. நா னினி இங்கிருக்க லாகாது ?—ஆ !—நான் எங்கே ஒளிந்துகொள் வது ?

[விரைவுடன் ஒளிந்து கொள்கிறாள். அங்ஙனம் செய்யும்பொழுது அவ ளுடைய சவுக்க மொன்று கீழே விழுந்து விடுகிறது. ராதாப்பிரியன் அதை யெடுத்து சயனத்தின் மீது வைக்கிறான்.]

லலிதை மெல்ல கதவைத் திறந்துகொண்டு உறங்கிய வண்ணமே வருகிறாள்.

ரா. ஆ ! இதுதானோ ?—ஆம் !—வெண்பட் டுடுத்த பிசாசு!— என்ன ?—உற்றுப் பார்த்தால் மணமகளாகிய லலிதையின் உருவா யிருக்கிறது !—

ல. பிராணநாதா !—பிராணநாதா !

ரா. ஆம்—சந்தேகமில்லை !—அந்தக் குரல்தான் !—என்ன ! கண்மூடி யிருக்கிறாள் !

ல. பிராணநாதா ! என்னைத் திரும்பிப் பார்க்கமாட்டீரா?

ரா. ஓகோ ! நித்திராவஸ்தையில் இருக்கிறாள்போலும்,—

ல. பிராணநாதா, தாம் என்மீது சந்தேகம் கொள்ளலாமா ? ஒரு வார்த்தை பேசும் என்னுடன்—ஒரு வார்த்தை—

ரா. சொற்பனம் காண்கிறாளோ ?

ல. இது உமக்கு நியாயமா? உம்மை யன்றி வேறொரு புருஷனை நான் கனவிலும் கருதுவனோ?

ரா. ஒஹோ! நித்திரையில் எழுந்து நடக்கும்படியான வியாதி என்கிறார்களே, இதுதான் போலும்—

ல. இதோ, எனக்கொரு முத்தம் கொடுத்து, இனி என்மேல் சந்தேகிப்பதில்லை யென்று சத்தியம் செய்துகொடும்.

ரா. தன் கணவனைக்குறித்து கனவு காண்கிறாள்போ லிருக்கிறது! நித்திரை கலையைச் செய்யவா? எப்படி நித்திரையைக் கலைப்பது?—

பங்கஜாட்சி மறைவிடமிருந்து வெளி வருகிறாள்.

ப. ஆஹா! அப்படியா சமாசாரம்! இங்கேயும் வந்தாயா? அவ்வளவு ஆணவமா? இதோ வருகிறேன்!

[விரைந்து போகிறாள்.]

ரா. இவள் ஏதோ சூது எண்ணுகிறாள்போ லிருக்கிறது. பின் தொடர்வோம்.

[விரைந்துபோகிறான்.]

ல. பிராணநாதா!—என்ன அழகா யிருக்கின்றது நிலவு காய்வது!—அதோ, சகோர பட்சிகளைப் பாரும்.—மடுவின் ஜலத்திற் சந்திரன் பிரகாசிப்பது என்ன விநோதமா யிருக்கிறது! உட்காரும் நீர்—துடைமீது தலை வைத்துப் படுத்துக்கொள்ளுகிறேன்—எனக்கு நித்திரை வருகிறது.—

[சயனத்தின்மீது படுத்துக்கொள்ளுகிறாள்.]

சோமநாதன் வருகிறான்.

சோ. என்னா பேச்சி இன்னம்?—ஓ! படுக்கையிலேயே படுத்துக்கினு தூங்குறிங்களோ?—ஆ! யார் அது? ஐ ஐயோ! பிசாசி! பிசாசி! பிசாசி! [ஓடிப்போகிறான்.]

தூடியானவர்கள் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

வந்தனம் தந்தனம் மன்னவனே
இத்தினம் நற்றினம் மன்னவனே
எங்களை யன்னியும் மன்னவனே
உங்களைப் போற்றினம் மன்னவனே

மு. கு. அடே ! மெள்ளப்போடா !
இ. கு. நீ மின்னே போ !
மு. கு. ஏ ! நீதாம் போயே ?
நா. கு. தூங்குறுப்போலெ இர்க்குதடா !
மு. கு. அவ ரல்லடா !
இ. கு. யாரோ பொம்மனுட்டிடா !
மு. கு. பொம்மனுட்டி யார்டா இங்கே ? கிட்ட போயி பாக்கலாம்.
எல்லோரும். அடடடடே ! பிசாசிடா ! பிசாசிடா ! பிசாசிடா !

[கூக்குரலுடன் ஓடிப்போய்விடுகிருர்கள்.]

ர. [உள்ளிருந்து] பொய் ! அவ்வளவும் பொய் ! எதோ ரூபி ! பார்ப்போம் !

பங்கஜாட்சியும் ரதவீரனும் வருகிருர்கள்.

ர. எதோ ?
ப. அதோ நீரே பாரும் !
ர. லலிதா !
ல. [நித்திரை நீங்கினவளாய்] ஆ ! என்ன ! என்ன சமாசாரம்? பிராணநாதா !
ர. பிராணநாதா !—பாதகி ! [கத்தியால் குத்தப்போகிருன்.]

பானுமதி ஓடிவருகிருள்.

பா. ஆ ! ஆ ! என்ன அநியாயம் ! [அவனைத் தடுக்கிருள்.]
ல. பிராணநாதா ! பிராணநாதா ! இதென்ன கோபம் ? நான் என்ன தப்பிதம் செய்தேன் ?
ர. என்ன தப்பிதம் செய்தாய் !—வெட்கங்கெட்ட பாதகி ! உன்னைக் கொன்று என் மானத்தைக் காப்பாற்றுகிறேன் !
பா. ஐயோ ! அவள் என்ன தவறு செய்தாள் நீ இப்படி கோபித்துக் கொள்வதற்கு ?
ர. இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்ருயே ! கேள் நீ தான், இங் கெப்படி வந்தாள் என்று !
பா. எங்கே ?
ல. ஐயோ ! நான் எங்கே இருக்கிறேன் ?

ர. எங்கே இருக்கிறாய் !—இளவரசரின் அறையில் ! அவர்படுக்கையில் இருக்கிறாய் !—

ல. ஐயோ ! நானிங் கெப்படி வந்தேன் ?

ர. சீ ! வாயை மூடு, பொய் யொன்று இனிமேல் !

பா. ஐயோ ! என் பெண் ஒரு பாபமும் அறியாள் ! இதென்ன மாயமோ அறியேன் நான் !

ர. ஆமாம், வேசியைப்பெற்ற உனக்கும் ஒரு வாயா ?

பா. சிவ ! சிவ !

ல. பிராணநாதா ! பிராணநாதா ! நீர் அப்படியும் என்னை அழைக்கிறீரா ? [தேம்பி அழுகிறாள்.]

பா. அப்பா ! ரகுவீரா ! இவ்வாறு பேதையாகிய லலிதைமீது சந்தேகங் கொள்ள லாமா ? ஆராய்ந் தறியாது ஆத்திரப் படலாமா நீ ? தீர விசாரித் தறி.

ர. தீர விசாரிப்ப தென்ன இனி? இதைப்பார்க்கிலும் பிரத்தியட்ச சாட்சி வேண்டுமா ?

ல. பிராணநாதா ! பிராணநாதா ! நீர் ஏதோ தவறான எண்ணம் கொண்டிருக்கிறீர்—

ர. சீ ! பேசாதே வேசி !

ல. ஐயோ ! ஐயோ !

வேசி என்றுவாய் கூசிடாமலே
யேசலாகுமோ மாசிலாயென்னை

ர. சீ ! பேயே ! அருகில் வராதே ! தீண்டாதே என்னை இனி தாசி !

ல. அம்மா ! அம்மா !

தாசிஞ ளைவேனே தரணியில் அம்மணி !
பேசிட லாகுமோ பேதை எனையிங்ஙனே !

பா. கண்ணே ! வருந்தாதே, பொறு, பொறு ! அழாதே, அழாதே ! நான் சொல்லுகிறேன்—

ர. பாதகி ! உன்னைப் பார்த்தலும் தவறு !

ல. ஐயோ ! பிராணநாதா ! என்னை விட்டுப் போகிறீரே—

என்னைப் பிரிந்து நீர் ஏகலு மாகுமோ
ஏதோ உம்மனம் இப்படி ஆயதே
இன்னல் இழைத்திட ஏற்றிடுமோ உமக்கு
ஏது நான் செய்குவேன் எந்திழை நாதா !

ர. உன்னை நான் நம்பியே உன் மத்த னாகினேன்
ஊர் நகைக்கக் காலம் உண்டாச்சுதே ஐயோ !
என்னை இக்கதிக்கு ஏனோ கொணர்ந்தாய் நீ
ஏதுபாவம் நான் இழைத்தனன் பாவி !

ல. பிராணநாதா ! பிராணநாதா ! நான் ஒரு பாபமுமறி யேனே !

ர. சீ ! என் னருகில் வராதே ! போ ! பாதகி! [போகிறான்.]

ல. பிராணநாதா ! நானெங்கே போவது ?—அம்மா! அம்மா, என்பிராணநாதர் போய்விட்டார்! நான் பிராணனோ டிருந் தென்ன பய னினி !

பா. கண்ணே, நீ வருந்தாதே ! ஏழைகளைக் காப்பாற்ற ஈசனி ருக்கிறார். இப்படி நிரபராதியான உன்னை ரகுவீரன் கை விட்டுச்சென்றது வீண்போகு மென எண்ணாதே.

ல. அம்மா ! அம்மா ! அவர் என்னதான் தவ றிழைத்த போதிலும் அவரைத் தூஷியாதீர் ! என் பிராணநாதரைத் தூஷிக்க என் செவிகள் கேட்டுச் சந்தோஷ மடையுமோ ?

பா. ஆம், ஆம், உண்மையே ! அவரை நொந் தாவ தென்ன ? நமது விதி இப்படி இருந்ததுபோலும்—

ல. ஆயினும் அம்மா, அவர் இவ்வாறு என்மீது சந்தேகம் கொள்ளும்படி நான் இந்த இடத்திற்கு எப்படி வந்தேன் ?

பா, அதுதான் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. என் அறை யில் படுத் துறங்கிக்கொண் டிருந்தாயே சுகமாய் ! என்ன மாயம் ! யார் செய்த சூது ? உறங்குகையில் அப்படியே யாராவது தூக்கிக்கொண்டு வந்து விட்டார்களோ என் னவோ ?

ல. இது யாருடைய அறை ?

பா. இளவரசருக்கு ஏற்படுத்திய அறை.

ல. ஓ! இப்பொழுது தெரிகிறது!—அம்மா! நா னிங்கு எப்படி வந்திருக்கக்கூடும் என்னையு மறியாதபடி? இளவரசர் எங்கே? அவரைக் கேட்டுப் பார்க்க லாமா?

பா. ஆம், அவரைக் கேட்டால்தான் இந்தச் சந்தேகம்நிவர்த்தியாகும். அவர் உத்தம புருஷன், உண்மையைக் கூறிவிடுவார். அகதிக்கு ஆகாயமே துணை! அவரைத் தேடிக் கண்டு பிடிப்போம் வா. [போகிறார்கள்.]

பங்கஜாட்சி வருகிறாள்.

ப. இப்பொழுதுதான் நமக்கு நல்லசமயம் வாய்த்தது. ரகுவீர ரிவ்வாறு லலிதையின் மீது சந்தேகம் கொண்டிருக்கும் பொழுதே நமது எண்ணத்தை முடித்துக்கொள்ள வேண்டும். இளவரசர் மாத்திரம் ஏதோ என்மீது சந்தேகங் கொண்டிருக்கிறார்போ லிருக்கின்றது. அதை எப்படியாவது மாற்றிவிடவேண்டும். இதற்குத் தக்க ஆள் நம்முடைய சோமநாதன் தான்.

சோ. [உள்ளிருந்து] பங்கஜாச்சி! பங்கசாச்சி!—

ப. ஏன்?

சோ. இங்கே வா.

ப. நீ இங்கே வா.

சோ. நான் வரமாட்டேன்.

ப. ஏன்?

சோ. அங்கே பிசாசி இர்க்குது!

ப. என்ன பிசாசி?—பயித்தியம்!

சோ. பயித்யமா! கட்லுமேலே பாரு!—வெள்ளெத்துணி கட்டிக்கினி இர்க்குத்து பாரு!

ப. அதெல்லாம் போய்விட்டது, நீ வா இப்படி.

சோ. இல்லெ, இர்க்குது.

ப. இல்லை, போய்விட்டது.

சோ. ஆனால் வரட்டுமா?

ப. வா, வா

மறுபடியும் சோமநாதன் வருகிறான்.

சோ. அப்பா ! பூட்டுது பிசாசு.—உம்—அப்றம் நம்ப கண்ணு லத்தெப்பத்தி ராஜாகிட்ட பேசினியா ?

ப. ஆமாம், பேசினாற்போல்தான். ஏதோ பிசாசுக்காக இவ்வளவு பயப்படுகிறாயே இப்பொழுது, பிறகு உன்னைக் கட்டிக்கொண்டு என்ன செய்வது ?

சோ ஏ ! ஏ ! நானு ரொம்ப தைர்யசாலி யாச்சே.

ப. ஆனால் ஏதோ பார்க்கலாம். நான் உனக்கொரு வேலையிடப் போகிறேன், அதன்படி செய்யவேண்டும்.

சோ ஏ ! நானு ஆம்படையான், நீபொண்டாட்டி; நீயா எனக்கு வேலெ இட்ரது ?

ப. ஆனால் போ, உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டாற் போல தான்—

சோ. இல்லெ இல்லெ; கோவிச்சிக்காதே, கண்ணல்லா !

ப. ஏதோ இளவரசருக்குப் புலிவேட்டையின்மீது மிகவும் இஷ்டமாம். நாளைத்தினம் அதி காலையி லெழுந்து புலிவேட்டைக்கென்று அவரை நம தூருக் கருகாமையிலுள்ள காட்டிற் கழைத்துச் சென்று பத்து நாள் அங்கேயே வேட்டையாடச் செய்யவேண்டும்.

சோ. புலிவேட்டெ எனக் கென்ன தெரியும் ?

ப. இதுதானோ தைரியம் ?

சோ. அதுக் கல்ல, ஒருவேளெ புலி என்னெ முழுங்கிட்டா நான் எப்படி உன்னெ கண்ணாலம் பண்ணிக்றது ?

ப அதெல்லாம் அப்புறம் யோசிக்கலாம்.

சோ. ஓகோ ! என்னெ முழுங்கிட்ட பிப்பாடு யோசிக்றதோ ?

ப. ஆனால் போ ! இஷ்டமானால் சொன்னபடி செய், கஷ்டமானால் என்னிடம் மறுபடியும் பேசவேண்டாம்.

[விரைந்து போகிறாள்.]

சோ. இதென்னடா கஷ்ட காலம் ! புலிவேட்டெ இண்ணு, நம்ப புலியெ வேட்டெ யாட்ரதா, நம்பளே புலி வேட்டெயாட்ரதா ? யோசிக்கணும். [போகிறான்.]

இரண்டாம் அங்கம் முடிகிறது.

## இரண்டாம் இடைக் காட்சி.

இடம்—களத்துமேடு. காலம்—பகல்.

வெங்கன், நாராயணன், கோபாலன், ஆசிகான், சாமன், துப்பன், வேம்பிலி முதலானோர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

வே. [ஒரு ஓலைக்கட்டை வாசித்தவண்ணம்] அப்றம் வாசிக்கட்டுமா?—“தேவேந்—திரன் திக்குபா, லர் வசிஷ், டர் முதலி, யோருடன்—ஓகோ!—திக்குபா, லர் லசிஷ், டர் முதலி, யோருடன் வருகிற விதங் காண்க.”

சா. டர்முதலி யாரையா அது?

நா. அடே! படிக்கும்போது குறுக்கா பேசாதே இண்ணு சொல்லலே நானு?—ஐயா, படிச்சது போதும்; இது வரெக்கும் நாடவம் நடத்தரத்துக்கே பொய்து விடிஞ்சிப் போவும். இப்போ நம்பளுக்கோ நாளு அதிகமா யில்லே. இப்பவே இந்த இந்த வேசம், இன்னாரு இன்னாருக்கிண்ணு தீமானிச்சூட்டா, ஒடனே அவங்கவங்க பாவத்தே எய்திக்கினு, பாட்டு கீட்டு எல்லாம் குருட்டுப் பாடம் பண்ணிடலாம்.

மற்றவர். ஆமாமாம்.

நா. ஐயா, நீதான் நாடவ முழுமெயும் படிச்சிருக்கரியே, ஒவ்வொரு வேசமா சொல்லிக்கினு வா, பாப்போம்.

வே. முன்னெ அர்ஜுனே—அர்ஜுனே வேசம் யார் போட்ரது?

மற்றவர். நானு! நானு!

நா. அடடே! என்னடா ஒரு வேசம் ஒர்த்தன் கட்ரதா, இத்தனிபேரும் கட்ரதா? இப்படி யெல்லாம் பேசனு வெவகாரம் ஒண்ணும் அறுது—ஐயா, நீ சொல்லிக்கினு வா, அர்சுனே வேசம் போட்ரவன் எப்டி இர்க்கணும்?

வே. ஆள் ஒய்ங்கா, ஒயரமா, டக்கா, மீசெகீசெ எல்லாம் ஜோரா யிர்க்கணும்.

நா. ஆறு யாருக்குக் கொடுக்கலாம் அந்த வேசம்?

மற்றவர். எனக்கு, எனக்கு!

சா. ஏண்டா! நீ ரொம்ப ஒய்ங்கா யிர்க்கறியே?

கு. ஆமாம்! ஒனக்குப் பாட்டு பாடத் தெர்யுமோ?
கோ. ஏண்டா! ஆசிகா, பொம்மனுட்டி வேசம் போட்ரவன் நீ! ஒனக்குக்கூட அர்சுனே வேசம் வோணுமோ?
நா. அடே! வளவளா இண்ணிக்கினு!—இதெல்லாம் ஒதவாது ஐயா! நீ கதெயெல்லாம் நண்ணு படிச்சி யிர்க்கறெ, நீ சொல்லிடு யாரு யாருக்கு எந்த வேசம் இண்ணு—
மற்றவர். ஆமாமாம்!—
வே. ஆணு—அர்ஜுனே வேசம் நாராயணனுக்குத்தான் சர்யா யிர்க்கும்.
நா. சரி! அந்த வேஷம் நான் கட்ரேன், அப்றம்—
வே. அப்றம், ஈஸ்பரன்.
கோ. அத்தெயாவது கொடு ஐயா எனக்கு.
கு. நானு போன வர்சமே கேட்டேனே.
சா. ஈஸ்பரன் ரொம்ப பாட்டு பாடணு மல்லா?

[கண் கொட்டி சைகை செய்கிறுன்.]

ஆ. ஏ! நானு பாடமாட்டனே?
சா. ரொம்ப பாட்னே, ஏதோ ஒரு தில்லாணு பாடு பாக்கலாம்.
நா. என்னையா? முயிக்கரே, நீ சொல்லேன்—ஈஸ்பரன் வேசம் யார் கட்ணு சரியா யிர்க்கும்?
வே. இல்லெ, அந்த ஈஸ்பரன் அர்ஜுனனேடே—உன்னேடே குஸ்தி புடிச்சி, உன்னே தோக்கடிக்கணும்—
நா. என்னது? அவன் யார்ரா அவன் என்னெ தோக்கடிக்கப் போறவன்? ஏதோ உடு பாக்கலாம்! கபுர்! என்னெ யார் டா தோக்கடிக்கப்போறவன்? எவண்டா அவன் ஈஸ்பரன்?
வே ஏண்டா, குப்பா, நீ எடுத்துக்கிறியா?
கு. எனக்கு வேணு ஐயா.
வே. கோபாலா நீ?
கோ. எனக்குப் பாடத் தெரியாதே!
வே. சாமா, நீ கட்றையா?
சா. ஈஸ்பரன் நண்ணு யிர்க்காதையா எனக்கு.
வே. அப்றம் யார்டா எடுத்துக்றது?—நான் எடுத்துக்கட்டுமா?
நா. நீ மாத்ரம் என்ன? பாக்கறியா ஒரு கை! ஹே!—

வே. அதெல்லடா அப்பா, நாடவம்தானே? நிஜமாவா சண்டெ போட்ரோம்?

நா. நாடவ மானுக்கா மாத்திரம் என்ன? என்னெ தோக் கடிச்சிப்புடுவியா?—அதெல்லாம் ஒதவாது!

வே. சரி! ஆனு, கொஞ்ச நாழி சண்டெ போட்ரமாதிரி போட்டு அப்றம் சமாதானமாப் போலாம்.

நா. ஆ! அப்டி—உம்,—அப்றம் என்ன வேசம்?

வே. மூகராச்சசே.

கு. ஆ! அது கொடு ஐயா எனக்கு. ஒரு கத்து கத்னேன்னு பொம்பிளைட்டிங்க பசங் கல்லா நடுங்கிப் பூடமாட்டாங் களா!—

வே. சரி, நீ மூகராச்சசே.

கு. ஆனு—எனக்குத் தவுந்த புஜகிருதி எல்லாம் இர்க்குதா?

வே. புஜகிருதியா? நீ பண்ணி வேசம் போட்டுக்கினு வரணும்—

கு. பண்ணி வேசமா! ராச்சசே இண்ணேயே?

வே. அதாம், அந்த ராச்சசே பண்ணியா வர்ரான்—

கு. ஓ! ஓ! என் ஐயா, உங் கண்ணுக்கு என்ன பண்ணிபோலெ இர்க்கறேனு நானு?

வே. ஏ!—வேசம்தானே—அதிலே என்ன தப்பு?

கு. அந்த வேசத்துக்கு ரொம்ப பாட்டுகிட்டெல்லாம் இர்க்கு தா?

வே. அதெல்லாம் இல்லெ, பண்ணி வந்த ஒடனே சிங்கம் போலெ கர்ஜிக்கவோணும்; அவ்வளவுதான்—

கு. ஓ! அது, நண்ணு கத்துவனே!—

வே. அப்றம்—ஊர்வசி.

சா. அத்தெ எனக்கு கொடு.

வே. இஸ்திரீ பாக மாச்சே.

சா. இஸ்திரீ பாகமா? ஆனு வாணு—

வே. ஏன்? மீசெயெ அடிச்சூட்டா போச்சு.

சா. என் வீட்லே இர்க்கருளே அவளுக்கு யாரு உத்ரவு சொல் ரது? எனக்கு வேணு.—அவ கோவிச்சுக்குவா ஐயா.

ஆ. நான் போடட்டுமா அந்த வேசம்?

வே. வாணும்; உன் கொரல் கெட்டுப் போச்சுடா—கோபாலா, நீ எடுத்துக்கிறியா !

கோ. ஏ! ஏ! என்னாலே முடியாது இனிமேலே. எனக்கு வையாசி மாசம் கண்ணாலம், அதுக்கோசரம் மீசெ வளக்கரேன்; என்னாலே முடியாது.

நா. ஆனா நீ தான் எடுத்துக்கோடா, ஆசிகான்.

ஆ. எடுத்துக்றேன். ஆனா அதுலே ஒரு வெவாரம் இர்க்குது.

நா. என்னா அது ?

ஆ. என்னா இண்ணா—போன வர்சம் கூத்துலே கோபாலனுக்கு நல்ல பொடவே கொடுத்தூட்டு, எனக்கு கியிஞ்ச பொடவெ கொடுத்தாரு ஐயா. அந்த பொடவெ என்னாண்ணா நெறைய பொத்தலு.—நான் வேசம் கட்டி அவிநயம் புடிச்சப்போ, டர் டர் இண்ணு கிய்ய ஆரம்பிச்சுது—அல்லாரும் சிரிக்க ஆரம்பிச்சாங்க ! என் மானமெல்லாம் போச்சி! இந்த வர்சம் எனக்கு நல்ல பொடவெ கொடுக்றதானா வேசம் கட்றே, இல்லாப்போனா முடியாது—இப்பவே சொல்விட்டேன்.

வே. இல்லெ, இந்த வர்சம் சரியா பாத்துத் தாரேன்.

ஆ. ஆனா சரிதான், ஆச்சேபனெ இல்லெ.

வே. அப்றம் பார்பதி—ஏண்டா—வேம்பிலி—நீ ?

வே. பாப்பாத்தி வேசம் எனக்கு வாண்டா ஐயா ! எனக்குத் தொப்பக் கூத்தாடி வேசம் கொடுத்தா கொடு, இல்லாப் போனா ஒண்ணும் வாணாம்.

வே. ஆமாமாம், மறந்துப்பூட்டேன். இந்த பார்பதிவேசத்தே உட்டேலாம். நீ தொப்பெக் கூத்தாடி வேசம் போட்டுக்கோ—

வே. ஆனா அதுலெ ஒரு வெவாரம் ஒய்ங் காவணும்.

வே. என்னா ?

வே. போன வர்சம் தொப்பக் கூத்தாடி வேசம் கட்ணத்துக்கு, கொத்துவாலியா, பலே சவாஸ், இண்ணு சொல்லி சாய அங்கோஸ்திரம் கொடுத்தாரே எனக்கு, அது எங்கே போச்சி ?

நா. யாரெக் கேக்கறே ? உங்கிட்ட கொடுத்துது, எங்கே போச்சிண்ணு, என்னெ கேட்டா ?

வே. இல்லெ, நீதான் கேளு வாத்தியாரெ, எங்கே இண்ணு,

நா. எங்கே ஐயா அது ?

வே. அத்தெ கள்ளு கடெயிலே கொண்டு போயி கொடுத்துட்டான்.—அத்தெ கொண்டாந்து முன்னே வைச்சாத்தான் இந்த வர்சம் வேசம் கட்டுவே !

நா. [வெங்கனுடன் ஒரு புறமாய்ப் பேசி] சரி ! நான் கொடுக்கரேன் போ.

வே. நீதான் உத்ரவாதம்.—

நா. சரிதான்—இன்னம் என்ன வேசம் இர்க்குது ?

வே. தர்ம ராஜா.

நா. அடே கோபாலா, நீ எடுத்துக்கோ அத்தெ.

கோ. தர்மராசாவுக்கு எத்தினி தரு இர்க்குது ?

வே. மூணு தரு இர்க்குது.

கோ. ஆறு எனக்கு வேணு ! ஒரு ராசா வேசம் கட்ன பத்து தருவாவது பாடத் தேவலேயா ? பத்து தரு போட்டுக் கொடுக்றதா யிர்ந்தா எடுத்துக்ரேன்.

நா. அப்படியே எய்திக் கொடுத்துடேய்யா ?

வே. எனக்கு எயுதத் தெரியாதே.

நா. தெரியாப் போனு என்ன ? துரோபதி யம்மன் சொயம் வரத்லே இர்ந்து நல்ல தருவா பொறுக்கிக்கினு போச்சி.

வே. சர்தான் ஆறு—அப்றம் வந்து, ரம்பெ—மேனகெ—அத்தெ ஜெயராமனுக்கும் கந்தனுக்கும் கொடுத்துடலாம். வினயகர், சரஸ்பதி, வயக்கத்தெப்போலெ ஏற்பாடு செய்துடலாம். சரி—அவுங்கவுங்க பாவத்தெ ஒடனே எய்திக்கினு குருட்டுப்பாடம் பண்ணிடுங்கோ. நாளெக்கி மொதலு ஒத்திகெ போடணும்—நேர மாச்சி, போவலாம்.

சா. எனக்கு ஒண்ணும் வேச மில்லையா ?

வே. ஒண்ணும் மீதி யில்லியே—

சா. லோகிதாச வேசமாவுது போட்ரேனே.

வே. லோகிதாசே இந்த நாடவத்துலே வல்லியே ?

சா. அவென் தம்பி?

வே. அவென் தம்பிகூட இல்லெ.—ஆறு—உம்—குப்பன் வேசம் போட்ரா, அவன் தம்பியா வா.—போவோம் வாங்க, நாளெக்கி சரியா சாயிங்காலம் வந்து சேர்ணும் எல்லாம்.

[குப்பனும் சாமனும் தவிர மற்ற வர்கள் போகிறார்கள்.]

கு. உனக் கென்னடா வேசம்?

சா. உன் தம்பி வேசம்.

கு. என் தம்பி வேசமா!

சா. ஆமாம், நீ என்ன வேசம் போட்ரே?

கு. எனக்குத்தான், எய்வு பண்ணி வேசம் கொடுத்தாங்களே!

சா. அப்டியா சமாச்சாரம்! அந்த வெங்கன் என்னெ ஏய்ச் சூட்டாம் பாத்தியா? வா சொல்ரேன்—அவன் மண்டெ யெ ஒடச்சூட்ரேன் பாரு! [இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

# மூன்றும் அங்கம்

இடம்—ஒரு சாலை. காலம்—காலை.

ஒரு புறமாக குடியானவர்களெல்லாம் குடித்துவிட்டுப் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

குடியானவர். எல்லோரும் குடிக்கும் கள்ளு
ஈ மொய்க்கும் ஈச்சங் கள்ளு
எங்களவர் குடிக்குங் கள்ளு
ஏழு மலைப் பானெ கள்ளு. (தானெ)
குறவஞ்சி என்ன செய்தா
குவலயத்தில் கூறவோ நான்
மறவெனக் கண்டு மல்லோ
மன்னவனெக் கைவிட்டாளே. (தானெ)

எல்லோரும் ஆடும் வேட்டெ
எலிவேட்டெ பூனெ வேட்டெ
எங்க தொரெ ஆடும் வேட்டெ
ஆளி மலெ யானெ வேட்டெ. (தானெ)

மூ. கு. அடே! அதோ தூரத்துலெ கொத்தவாலையா வர்ராருடா!

இ. கு. அடெ! அவரு நம்பளெ தண்ணி போட்டுக்கத் தேவலெ உச்சவத்துலே இண்ணு சொன்னரே!

மற்றவர். ஆமாண்டா! ஆமாண்டா! நம்ப பூடலாம்!

[விரைந்து போகிறார்கள்]

லலிதையும் பானுமதியும் வருகிறார்கள்.

ல. அம்மா,

ராகம்—ஏதுகுலகாம்போதி. தாளம்—ஆதி.

பல்லவி.

இப்புவியில் நான் எப்படி உய்குவேன்
இப்படி யாயிடின் என்விதி அம்மணி. (இ)

அநுபல்லவி.

கைப்பிடித் தென்றனை கனவிலுமறவே னென்ற
காதலன் வெறுத்திடக் காதகி என் செய்வேன்.

சரணம்.

எந்த ஜன்மந்தனில் எப்பிழை செய்தேனோ
இந்த ஜன்மந்தனில் இப்படி வாய்த்தது
சொந்த புருஷனைச் சூது செய்திடும்
அந்தக்காரிகையுமிந்த அவனியிலுண்டோ. (இ)

அம்மா, இனி உயிர் வாழ்வதில் என்ன பிரயோஜனம்? அம்மணி, எனக்கு உத்தர வளியும். அதோ ஓடும் ஆற்றில் விழ்ந்து என் பாழும் ஜன்மத்தைப் போக்கிக்கொள்ளுகிறேன்!

பா. கண்ணே! லலிதா! நீ இவ்வாறு தைரியத்தைக் கைவிடலாமா? உன் பிராணநாதன் மதி மயங்கி இருக்கிறான் இப்பொழுது. இன்னும் கொஞ்ச காலத்தில் தான் எண்ணிய

தெல்லாம் தவறெனவறிந்து உன்னை மன்னிப்பு கேட்பான், அஞ்சாதே.

ல. அம்மா, அவர் குணத்தை நீர் நன்று யறியீர். தான் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று பிடிவாதஞ் செய்பவர். அவர் மனம் மாறுமென்று நான் நினைக்கவில்லை.

பா. அப்படி யல்ல. நாம் இளவரசரை ஒன்றும் கேட்கவில்லையே. அவரை நேரிற்கேட்டு, நீ நிரபராதி யென்று ரூபிப்போமாகில் உன் பிராணநாதர் ஒப்புக்கொள்வார் என்பதற்குச் சந்தேக மில்லை. இளவரசர் வனத்திற்கு வேட்டையாடப் போயிருக்கிறாராம். இந்த வழியாகத் தான் இன்று திரும்புவார் என்று சொன்னார்கள். நாம் சற்றிங் கிருந்து அவரை நேரிற் கண்டு கேட்போம்.

ல. அப்படியே செய்வோம்.—அம்மா, அந்த எதிர்ப்புறம் போய் இருப்போம்; இங்கிருந்தால் அந்த ஆற்றங் கரை நன்றாய்த்தெரிகிறது. அதைப் பார்க்கும்பொழு தெல்லாம் என் பிராணநாதரும் நானுமாக அக் கரையோரம் விளையாடிய விளையாடல்க ளெல்லாம் என் மனத்திற்கு ஞாபகம் வர என்னையு மறியாதபடி எனக்குத் துக்கம் வருகிற தம்மா!

[அழுகிறாள்]

பா. லலிதா! என் கண்ணல்ல!—வா, அழாதே!

ல. அம்மா, அதோ பிராணநாதர் வருகிறார்!

பா. ஆம், அதோ பார்! நான் சொல்லவில்லையா? உன்னைப் பிரிந்த துக்கம் அவனுக்கு மில்லாமற் போமா? அவனும் என்ன கோலத்தி லிருக்கிறான் பார்.

[ஒரு புறமாக அழைத்துச் செல்கிறாள்.]

ரதவீரன் வியசனத்துடன் வருகிறான்.

ர. "கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவிலையாக்
கொண்டுவிடு மானார்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ!"
ஐயோ! இப்படிப்பட்ட பெண் ஜன்மங்களை ஏனோ படைத்தான் பிரம்மன்?

ராகம்—சங்கராபரணம்.

மானேர் விழியுடை மாதாம் மறலியைத்
தானே படைத்துச் சதுமுகன்—ஏனோ
காலன் தனைப்படைத்தான் காருண்ய மில்லாத
வேல்போல் விழியா ரிருக்க.

இத்தனை யமன்க ளிருக்க ஏன் யமன் என்றொருவனைப் படைத்தான் பிரம்மன்! ஐயோ!

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

கண்ணிகள்

பித்தம் பிடித்தவன்போல் சித்தம் குலைந்தலைய
எத்தினம் செய்த பாபம் இத்தினம் மூண்டதே!
சித்தஜன் மயங்கிடும் சித்தினி யவளுருவம்
மெத்தவு மென்மனத்தைக் குத்திரம் செய்யுதே.

ஐயோ! நான் யாருக் கென்ன பிழை செய்தேன் நா னிக் கதிக்கு வர!—ஆ! எனக்கு இவ்வளவு துரோகம் செய் தவளாயினும் லலிதையை நான் மறந்திடச் சக்தி யற்றவனா யிருக்கிறேனே! நான் எவ்வளவு முயன்றும் முடியவில் லையே! நான் இனியது எதைக் கேட்கும்பொழுதும் அவள் குரலே ஞாபகம் வருகிறது! எந்த அழகிய வஸ்துவைப் பார்க்கும்பொழுதும் அவள் இணையிலா அழகிய ரூபமே என் கண்முன் நிற்பதுபோ லிருக்கிறதே!—ஐயோ! எனக்கு இவள் துரோகம் செய்வாள் என்று என் கனவி லும் எண்ணியதில்லையே! ஆ! எனக்குத் துரோகி யாகாது என் காதலியாய் லலிதை இருந்திருப்பாளாயின், நான் இப்பொழுது என்ன சந்தோஷ முள்ளவனா யிருப்பேன்! இப்பொழுதோ கண்டவர் நகைக்கக் காரண னாயினேனே!

ராகம்—அசாவேரி. தாளம்—திரிபுடை.

கண்ணிகள்.

பெண்ணொருத்தியால் மண்ணிலிக்கதிக்கு
எண்ணிநான் வந்திட்டேன் பண்ணுவ தேதோ?

கண்ணினைப் போலென்னைத் தண்ணருள் செய்யாது
புண்பட என்மனம் நண்ணியதே காலம்! (க)

ல. [ரகுவீர னெதிர் வந்து] பிராணநாதா!

ராகம்—மோஹனம். தாளம்—ரூபகம்.

பல்லவி.

இனியருள் புரிவீர்
ஏதினிச் செய்குவேன்
மாதினைக் காத்திடும். (இ)

அநுபல்லவி.

தனியாயென்றனை தரணியிற் கைவிடல்
தர்மமோ கர்மமோ மர்மமோ.—காதலா! (இ)

சரணம்.

ஏழை புவியினில் ஏது பிழை செய்தேன்
கோபமோ, சாபமோ, பாபமோ.—காதலா! (இ)

பிராணநாதா! பிராணநாதா! தாம் ஏதோ தவறாக எண்ணி என்மீது சந்தேகம் கொண்டிருக்கிறீர். ஐயோ! நான் ஒரு பாபமு மறியேனே! பிராணநாதா, என்னை முகம் திரும்பி ஒரு தரம் பாருமே—

கண்ணிகள்

பாரீரோ என்றன் முகம் பார்த்தொருகால் என் கவலை
தீரீரோ வாய்திறந்து செப்பீரோ ஒரு வார்த்தை?
காரீரோ என்னை யின்று காதகி நானானாலும்
தேரீரோ உம்மனமும் தெரிவை நான் ஏது செய்வேன்?

ர. லலிதா! லலிதா! எனக்கு ஏன் துரோகம் செய்தாய் நீ? உனக்கு நான் துரோகம் மறப்பினும் எண்ணி யிருப்பேனோ? என்னை அவமானத்துக் காளாக்கி இந்தக் கோலத்திற்குக் கொண்டு வந்தனையே!

ல. ஐயோ! பிராணநாதா! நான் பிரமாணமாகச் சொல்கிறேன், உமக்குத் துரோகம் கனவிலும் நான் எண்ணியவளல்லவே!

ர. பிறகு இளவரசர் அறையில் எப்படி வந்தாய் அன்றிரவு?

ல. ஐயோ! அது தெரியாமற்றானே தவிக்கிறேன்! நான் சத்தியமாகச் சொல்கின்றேன். என் தாய் தந்தையர்மீ தாணை! நான் அறியேன், பிராணநாதா!

ராகம்—மத்தியமாவதி. தாளம்—ஆதி.

பல்லவி.

இனியேனும் காதலா இளகாதோ உம்மனம்
ஏழைமுகம் பார்த்தேனும். (இ)

அநுபல்லவி.

தனியாக்கி யென்றனை தவிர்ப்பது மழகோ
தரணியி லுமையன்றி தாங்குவர் யாரெனை. (இ)

சரணம்.

மறந்தீரோ நீர்சொன்ன திரமான வார்த்தையை
இறந்து நான் மடிந்தாலும் எண்ணுவனோ தீதினை. (இ)

பிராணநாதா! பிராணநாதா! நேற்றைத் தினம்தானே 'உன்மீது இனி சந்தேகங் கொள்வதில்லை' யென்று சத்தியம் செய்து கொடுத்தீர் எனக்கு! இதற்குள்ளாக அதை மறந்து விட்டீரா தாம்?

ர. லலிதா! இதி லெல்லாம் என்ன பிரயோஜனம்? அந்த அறைக்குள் நீ போகவேண்டிய காரணம் என்ன? நீயு மறியாதடி எப்படி அங்கே போயிருக்கக்கூடும்?

ல. பிராணநாதா! உண்மையில் எனக்குத் தெரியாது. இளவரசரைக் கேட்டுப் பார்ப்போம். அவர் எல்லாவற்றையும் விளங்கச் சொல்வார். அவரைத்தான் தேடி இப்பொழுது இங்கு வந்தேன். அதோ அவர் வருகிறார்போ லிருக்கிறது! சற்றிரும்.

ர. பட்டது போதாதோ அவமானம்!—இன்னும் வேண்டுமா?

[போக முயல்கிறான்.]

ல. பிராணநாதா! பிராணநாதா! கொஞ்சம் இரும்!

[கையை நீட்டி வேண்டுகிறாள்.]

**ர.** [அவள் விரலினின்றும் மோதிரத்தைப் பிடுங்கி] கொடு இதை! [விரைந்து போகிறான்.]

**ல.** அம்மா! அம்மா! என் மோதிரம்! என் மோதிரம்!—

கண்ணிகள்.

கண்ணே யுனையன்றி மண்மே லொரு மாதை
எண்ணேனென் றெனக்கிட்ட எழின்மோதி ரம்போச்சே
பெண்ணாகப்பிறந்து நான் பெற்ற பல னீதோ
கண்ணாரக் காதலன் கைவிடவு மாச்சே!

**பா.** (முன்வந்து) கண்ணே! இனி நம்மா லாவ தொன்று மில்லை. ஈசன்தான் உன்னை ரட்சிக்கவேண்டும்!—ஆயினும் இதோ இளவரசர் வருகிறார். அவரைக் கேட்டுப் பார்ப்போம்.

**ல.** அம்மா, நீர்தான் கேளும்.—

பரிவாரங்கள் சூழ ராதாப்பிரியனும், சோமநாதனும் வருகிறார்கள்.

**சோ.** இதுக்குள்ளொ பட்டணத்துக்குப் போவக்கூடா திண்ணு சொல்ரெ நானு!—

**ரா.** ஏன்?—வேட்டை யெல்லாம் முடிந்துவிட்டதே; இனி யென்ன வேலை இங்கே?

**சோ.** ஆனாலும் போவக்கூடாது.

**ரா.** ஏனப்பா?

**சோ.** நான்தான் சொல்ரேனே!

**பா.** அரசே! அரசே! தாம்தான் என் மகளின் மானத்தைக் காப்பாற்றவேண்டும்! காப்பாற்றவேண்டும்!

[ராதாப்பிரியன் பாதத்தில் வீழ்கின்றாள்.]

**ரா.** அம்மா! அம்மா! எழுந்திரும்! என்ன சமாசாரம்?

**பா.** இளவரசே, என் மகளின்மீது அவள் காதலன் ஏதோ சந்தேகங் கொண்டிருக்கிறான், அன்று அவள் உமது அறையில் இருந்ததைக் கண்டு! என் மகள் அங்கு எப்படி வந்தாளென்று அவளுக்கே தெரியவில்லை. அவள் ஒரு பாவமு மறியாத பேதை! தாம் தான் உண்மையைத் தெரிவித்து

அவள் மானத்தைக் காப்பாற்றவேண்டும். இல்லாவிட்டால் அவள் உயிர்விடுவாள்!

ரா. அப்பொழுதே நினைத்தேன் இப்படி ஏதாவது சங்கடம் வந்துசேருமென்று!—அம்மா, நான் என்ன சொல்லப் போகிறேன். எனக்கு மிகவும் ஆச்சரியமா யிருந்தது! நான் அங்கு நின்று பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று கதவு திறக்க, லலிதை கண் மூடிய வண்ணம், தனக்குள் தானே ஏதோ பேசிக்கொண்டு, மெல்ல அறைக்குட் பிரவேசித்தாள். தூக்கத்திலேயே அப்படியே நடந்து வந்திருக்கவேண்டும். இதைப்பற்றி வாசித்திருக்கிறேன். இது நரம்பு சம்பந்தமான ஒரு வியாதி யாகும்.

பா. ஐயா! இதைத் தாம் ரகுவீரனிடம் கூறி அவன் சந்தேகத்தைத் தீருமே! தாமாக நேரிற் கூறினுற்ருன் அவன் சந்தேகம் போகும். விவாகம் நாளைத்தினம் என்று எல்லாம் சித்திம் செய்திருக்க இத் தருணத்தில் அவதூருன இவ் வார்த்தையைக் கூறி வெறுத்துச் சென்ருன். என் மகளின் மானத்தைக் காப்பாற்றியவ ராவீர்! அவளுக்கு உயிர்ப் பிச்சை தந்தவ ராவீர்! அரசே! என் வேண்டுகோளைத் தாம் வெறுக்க லாகாது.

ரா. அதற்கென்ன அம்மா, அப்படியே ஆகட்டும்.—அம்மா, லலிதா, நீ வருந்துத லொழி; நான் உன் பிராணநாதன் சந்தேகத்தை நிவர்த்திக்கின்றேன். பதிவிரதையாகிய உன்மீது அவன் எங்ஙனம் சந்தேகங்கொண்டான்?—எங்கே ரகுவீரன்?

ல. இப்படித்தான் போனுர், சற்றுமுன்பு.

ரா. உடனே நாம் போவோம்.

சோ. ஏ! ஏ! வாணும்! அப்பவே சொல்லலே!

ரா. என்ன சோமநாதா! ஏன் தடை செய்கின்ருய்?

சோ. அப்பவே சொல்லலே நானு, போவக்கூடாதிண்ணு?

ரா. உனக்கென்ன பயித்தியமா பிடித்திருக்கிறது? என் பட்டணம் போகக்கூடாதென்கிருய்?

சோ. நாளெ நண்ணேக்கிப் போவலாம்! இண்ணேக்கி வாணும்.

ரா. ஏன்?

சோ. சொல்லிடட்டுமா சமாசாரம்?

ரா. சொல்.

சோ. அப்றம் பெரிய கஷ்டம் வந்துசேரும், இப்பவே சொன்னே.

ரா. என்ன அப்படிப்பட்ட காரணம்?

சோ. உங்களுக் கென்ன தெரியும்?—எனக்கல்லவோ வரும் தொந்தரவு.

ரா. உனக் கேன் தொந்திரவு?

சோ. ஆன என்னெ கண்ணாலம் பண்ணிக்கத்தேவலெ இன்றிங்களா?

ரா. யார் வேண்டா மென்கிறது?

சோ. பின்னெ பட்ணத்துக்கு இண்ணைக்கிப் போவாதிங்கோ.

ரா. நான் பட்டணம் போவதற்கும், உன் கலியாணத்திற்கும், என்ன சம்பந்தம்?

சோ. அப்றம் சொல்லிடுவே!

ரா. சொல்லிவிடு.

சோ. நாளெ நண்ணைக்குள்ளே பட்ணம் நீங்க போனிங்களா, அப்றம் பங்கஜாச்சி என்னே கண்ணாலம் பண்ணிக்க மாட்டா!

ரா. இதென்ன பயித்தியம்!

சோ. பயித்யமா?—அதோ பங்கஜாச்சி! நேரா நீங்களே கேட்டுப் பாருங்கோ!

பங்கஜாட்சி வருகிறாள்.

ரா. இதென்ன பங்கஜாட்சி! நான் வியாழக்கிழமைக்குள் பட்டணம் வந்து சேர்ந்தால் நீ சோமநாதனை விவாகம் செய்து கொள்ள முடியாதென்று கூறினையாமே! என்மீ தென்ன கோப முனக்கு?

ப என்ன அரசே! அந்தப் பயித்தியம் கூறுகிறதைத் தாம் நம்புகிறீரே!—நீர் சுகமாய்ப் பட்டணம் வந்துசேரும் உடனே.

ரா. சந்தோஷம்! ஆனால் நாம் உடனே போவோம்; வாருங்கள்.

[ராதாப்பிரியன், பானுமதி, லலிதை, பரிவாரங்கள் போகின்றனர்.]

சோ. ஏ! என்ன சொன்னே? நானு பயித்தியம்?

ப. இல்லாவிட்டால் மிகவும் புத்திசாலிதான்! அரசர் பட்டணத்திற்கு வியாழக்கிழமைக்குள் திரும்பி வரக்கூடாதென்று சொன்னேனு இல்லையா?

சோ. சொன்னெ.

ப. இப்பொழுது, அதோ திருப்பிப் போகிறுரே!

சோ. நீதானே போவச் சொன்னே!

ப. ஆமாம்! உன்னையும் போகச்சொல்கிறேன், நீயும் போ!

சோ. அப்றம் கண்ணாலம் என்னமாப் போரது?

ப. ஆமாம்! கெட்ட கேட்டிற்குக் கலியாணம் ஒன்று! சீ! போ! பயித்தியம்! உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்வேன் என்று கனவிலும் நினையாதே, போ!

சோ. ஏ!—அப்படியா சமாச்சாரம்!—ஆவட்டும்! ஆவட்டும்!—எனக்கும் தெரியும்—தெரியும்! [போகிறுன்.]

ப. தெரிந்தது! பயித்தியம்!—இதனுல் ஆகவேண்டிய தென்ன இனி?—இனி நாம் தாமதிக்க லாகாது. இளவரசரிடம் போய் இவர்கள் முறையிட் டிருக்கிறுர்போ லிருக்கிறது. இளவரசர் ரகுவீரரிடம் ஏதாவது பேசுமுன் அவரை நம்மையே மணம்புரிவதாக வாக்களிக்கும்படி செய்யவேண்டும். [போகிறுள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் இடைக்காட்சி.

இடம்—களத்துமேடு. காலம்—மாலை.

சாமன், நாராயணன், கோபாலன், குப்பன், ஆசிகான், வேம்பிலி முதலானோர் வருகின்றனர்.

நா. அடே, அல்லாம் வந்திர்க்ரோமாடா?

சா. அல்லாரும் வந்திர்க்கராங்கோ; நம்போ ஆரம்பம் பண்ணலாம்.

நா. அடே, அவன்,—வாத்யார் எங்கேடா?

சா. வாத்யாரு அந்த மணியக்கார பாப்பாங்கிட்ட போயிர்க்கறுன், புஜகிர்தி கிரிகிடம் அல்லாம் வாங்கியார, அந்த

எய்வெடுத்த பாப்பா போன வர்சம் ஏயு பணம் பாக்கிண்ணு புடிச்சி வைச்சிக்கினு இர்க்கருன்.

நா. ஆனு புஜகிர்தி, கிரிகிடம் அல்லாம் இல்லாதே என்னமாடா நாடகம் போட்ரது ?

சா. இண்ணைக்கிப் பரவா யில்லேடா, இண்ணைக்கி ஒத்திகெ தானே. நீங்க ஒத்திகெ நடத்துங்கோ, நான் அல்லாம் அப்றம் வர்ரேன், இண்ணு சொன்னு வாத்தியாரு. நம்போ ஆரம்பிக்கலாம்.

நா. ஆனு, அடெ, சாமா, நீ எடுத்துக்கோடா செவிடியே—துத்தி, மோர்ஜிங் எல்லாம் வந்திர்க்கானுங்களா ?—ஆ—சரி, மொதல்லெ நான் தானேடா வர்ரே ?

சா. ஏ !—மொதல்லெ புள்ளையாரு! [படிக்கிருன்.] "அகோ தெப்படியென்ருல், சர்ப்பசித்தி விநாயகர் வருகிற விதங் காண்க" எங்கெடா புள்ளையாரு ?

வெ. இதோ, நான் தான் அப்பா.—தும்பிக்கெ யில்லெயேப்பா ?

சா. பரவாயில்லே, கையெ இப்டி வச்சிக்கோ இப்போ—பாடுங்கடா, 'அத்திக்கணபதி,—

நா. [ஆரம்பம் செய்ய, எல்லோரும் அவனுடன் பாடுகிருர்கள்]

ராகம்—நாடை, தாளம்—ஆதி.

அத்திக் கணபதி ஆலக் கணபதி
பத்திக் கணபதி பஞ்சாக்கரபதி
முத்திக் கணபதி மூவர்க் கதிபதி
தத்திக் கணபதி தாளைப் பணிவோம் !

சா. அடேடேடே ! எத்தனி தரண்டா சொல்ரது ! தத்திக் கணபதி என்னுடா? தந்திக் கணபதி ! தந்திக் கணபதி !

நா. அல்லாம் சரிதாண்டா ; பாட்லெ ஒண்ணும் கேக்காது. உம், அப்றம்—

சா. [படிக்கிருன் ] "அகோதெப்படியென்ருல் விநாயகர் வரமளித்துப்போனபின் சரஸ்பதி அம்மன் வருகிற விதங் காண்க"—எங்கேடா சரஸ்பதி ?

வே. அவன் வல்லேப்பா; சரஸ்பதி பொண்டாட்டிக்கி பல் நோவா, வயித்தியங்கிட்ட போரேன் இண்ணி சொல்லிட்டுப் போனு.

சா. சரி ஆனு, அதுக்குப் பதிலா "சம்போ சதாசிவா" பாடிடுங்க.

நா. [பாட, எல்லோரும் கூடப் பாடுகிறார்கள்.]

ராகம்—சங்கராபரணம், தாளம்—ஜம்பை.
சம்போ சதாசிவனே தத்பரனே அற்புதனே
அம்போருகத் தோனே அரகர சிவ. (சு)

சா. [படிக்கிறன்.] "அகோதெப்படியென்றால் — ராஜாதிராஜன்; ராஜகாம்பீரன், ராஜமார்த்தாண்டான்—ராஜகிரத்தண்டன்,—ஆ ஆ!—ராஜகீர்த்தியாண்டன்—ராஜசேகரன்—அர்ஜுன ராஜன் சபைக்கு வருகிற விதங் காண்க"—வாடா அர்ஜுனு!—எங்கேடா அவென் நாராயணன்?

பா. அதோ கொஞ்சம் தண்ணி சாப்டப் போனன்—இதோ வர்ரான்.

நா. [பாடுகிறன்]

ராகம்—மோகனம், தாளம்—திரிபுடை.
அர்ஜுனன் இதோ வந்தான்.—ராஜாதிராஜன்
அர்ஜுனன் இதோ வந்தான்.

[பின் பாட்டு எல்லோரும் பாடுகிறார்கள்.]

சா. அடி போட்டுப் பாடடா!

நா. அகோதெப்படியென்றால் — பஞ்சபாண்டவர்கள் — நடுவுலே பொறந்தவனுகிய—அர்ஜுனராஜனுகிய — நானுகப்பட்டவன்—பாசுபதார்த்தம்—வாங்கிவரும் பொருட்டு—வேட்டையாடுகிறவிதம் காண்க!—ஏ!—தவுஸ் செய்கிற விதம் காண்க!— வரச்சொல்லுடா, ஊர்வாசி, ரம்பெ எல்லாம்.

சா. போடா! இதுக்குள்ளே அவஸ்ரம்—தவுஸ் பண்ணுடா! காலெ தூக்கு!—உம்! பாட்டு "ஆரண்யத்தில்"

நா. அது ஒண்ணு இர்க்குதல்லா! ஆமாமாம்! [பாடுகிறன்.]

ராகம்—அமீர்கல்யாணி. தாளம்—ரூபகம்.

ஆரண்யத்தில் அர்ஜுனன் நான்
தவத்தைச் செய்யவே [பின்பாட்டு.]
அடியார்கண்டு, ஆவல்மீறி
அழுது நொய்யவே ! [பின்பாட்டு.]

அகோ தெப்படியென்றால், அர்ஜுனராஜன், நான், அகோரமான தவஞ்செய்கிறேன் ! என் கிட்ட ஒருத்தரும் வரக்கூடாது! வந்தால் சாம்பலாக்கிப்போடுவேன்]—அடே, சாமா, வரச்சொல்லுடா அந்த ஊர்வசியே! என் காலெல்லாம் நோவுது! எத்தனி நாழி நானு நிக்கிரது !

சா. எங்கேடா ஊர்வசி ?

ஆ. இதோ வர்ரேனே? மொதல்லே நானு அவிநயம் புடிக்கத் தேவலியா ?

நா. அல்லாம் சீக்ரம் ஆவட்டுண்டா !

ஆ. [பாடி அபிநயம் பிடிக்கிறான்.]

ராகம்—அமீர்கல்யாணி. தாளம்—ரூபகம்.

நேரஞ்சென்று வந்தேன் என்று
நினைத்தே இந்திரன்
கோரம் என்ன செய்விப்பானோ
கோரித் தந்திரன்.

கோ. [ஆசிகான் கன்னத்தில் ஒரு அறை அறைந்து] ஆத்தெரி! திருடா !

மற்றவர். என்னடா! என்னடா அது ?

கோ. இல்லே யப்பா! என் அங்கோஸ்தரத்தே திருடியாந்துட்டா, அப்பவே வாணுண்டா இண்ணே!

ஆ. உம்! அங்கோஸ்தரம் இல்லாதே நானு எப்படி அவிநயம் புடிக்கரது?

சா. போனு போவுதுடா, அப்றம் கொடுத்துடுவா ! சண்டே வேணும்.

நா. அடே! எத்தனி நாழிடா? என் காலெல்லாம் நோவுது! இப்பவே சொன்னேன் !

சா. ஆவட்டுண்டா, நேர மார்வுது.

ஆ. அடி தோழிகாள்,—ஊர்வெசி, ரம்பே—

சா. அடெடெ! ஊர்வெசி இல்லெடா.

ஆ. ஏ! நான் இல்லியா ஊர்வசி ?

சா. நீ உன்னெயே கூப்புட்றதோ? ரம்பே, திலோர்தமே, மேனகே, இண்ணு செர்ல்லு.

ஆ. ஆமாமாம்! அடி தோழிகாள ரம்பே, திலோர்தமே, மேன கே—அடே! என்னடா எம் மவுனுங்கோ ஒர்த்தரையுங் காணோம் !—

சா. என்னடா இவன், பெரிய தொந்தரவா யிர்க்குது! அவுங் களுக்கு ஒண்ணும் பேச்சி இல்லேடா, சும்மா வந்து உலாவ னும்; இண்ணெக்கி என்னாத்துக்கு? ஒத்திகெதானே!

ஆ. ஒத்திகெ இண்ணும் வரணும் அவுங்கல்லா, இல்லாப் போனா அயகா யிர்க்குமா?

சா. ஆனா வந்து நில்லுங்கடா யாரானாலும் மூணு பேரு. இவன் தான் ரம்பே, இவன் திலோர்தமன், இவன் மேனகே—

ஆ. அடி தோழிகாள், ரம்பெ, திலோர்தமே, மேனகே, நாம் எல்லோரும் இந்த நந்தவனத்தை சுத்தி சற்றே உலாவி வரலாம். நாலு பெயரும் ஒயிலாக நடக்கிறார்கள்.

சா. அடெடே! என்னடா அத்தெகூட சொல்லிட்டியே! அத்தெ சொல்லக்கூடாதுடா! நீங்க நடக்கணும், இண்ணு எய்தியிர்க்குது. இத்தெ கூடவா நீ சொல்லிடுரது?

ஆ. ஆனல்——நடக்கரோம்—

நா. அடே நடக்றது அப்றம் இர்க்கட்டும், நாயி யாவுது, என் காலு நோவுது!

ஆ. அடி தோழிகாள், இதோ நிக்கும் மா புருஷன் யாரோ தெரிய வில்லெ.

சா. மா புருஷனா? மவா புருஷன்!

ஆ. மவா புருஷன் யாரோ தெரியவில்லே, மம்மதனுக்கு சமா தானமா யிருக்கறார்.

சா. கொஞ்சம் இருடா ! சமாதானமா யிர்க்குறுரா ! நண்ணு படிச்சி யிர்க்கரேடா பாடம் !—சமானமா யிருக்குறுர் !

நா. ஆஹா ! என்ன ஆச்சரியம் ! யாரோ குரல் கேட்கின்றது ! என்ன இனிமையா யிருக்கிறது பாட்டு !—பாடுடா சீக்கிரம்.

ஆ. நாஞ ?

சா. ஆமாம், நீ தான், 'என்னுடன் நீ—

ஆ. [பாடிக்கொண்டே அபிநயம் பிடிக்கிருன்.]

ராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

என்னுடன்—நீ பே— [பின்பாட்டு]

நா. என்னடா ! அது ?—கொழுப்போ ?

ஆ. என்னுடன் நீ பே, சாதனு நியாயமோ [பின்பாட்டு]
இத்தனை கோபமு மேக்குமடா சாமி. [பின்பாட்டு]

சா. அடேடேடே ! என்னடா எழுவா யிர்க்குது ! மேக்குமடா என்னடா அது ?

ஆ. பின்னே என்னுவான் ?

சா. மேற்கு, மொடா ! மேற்கு மொடா !

ஆ. மேற்கு மொடாவும், கெழக்கு மொடாவும் !

நா. அடே ! அவன் சொல்ரதெல்லாம் சொல்லட்டும். இர்ரா சொல்ரேன்.—உம், அப்றம்—ஆஹா ! யார் இப்படி என் தவத்தைக் கெடுக்கப் பார்க்கிறது ?—

சா அடேடே ! இர்ரா ! இன்னொரு தரு இர்க்குதுடா !

நா. இன்னொரு தருவும் எயவும் ! சீக்ரம் பாடச்சொல்லு ஆனு

சா. 'நியாயமா'

ஆ. ஆ ! நல்ல தரு ஆச்சே அது !— [பாடுகிருன்.]

ராகம்—பியாகடை. தாளம்—ஆதி.

நியாயமா இது—நாயே வா [அபிநயம் பிடிக்கிருன்.]

நா. ஏண்டா ! அவ்ளவு கொயுப்பா இண்ரே !

[ஆசிகான் முதுகில் பளீர் என்று அறைய அவன் திரும்பி அடிக்க, இருவரும் சண்டை போடுகிருர்கள்.]

இந்தச் சமயத்தில் வேங்கன் ஓடிவருகிறன்.

வே. அடே! இதென்னடா! என்னடா! ஒத்திகெயா இது? நான் ஒர்த்தன் இல்லாப்போனு சண்டெதானு?

ஆ. இல்லெ அப்பா! நானு அவிநயம் புடிச்சா, அதுக்கு என்னே முதுவுலே அறைஞ்சா நாராயணெ! [அழுகிறன்.]

நா. ஏ!—என்னெ நாயே இண்ணு ஏன் கூப்பிட்டா கேளையா? முன்னே என்னண்ணு—பே இண்ணு, சா இண்ணு! அப்றம் என்னடா இண்ணு, நாயே இண்ரா!

வே. ஏண்டா! அவனெ ஏண்டா நாயே இண்ணெ?

ஆ. பாட்லே அப்டி எய்தியிர்ந்துது, நாயே வா, இண்ணு. அதுக்கு அவிநயம் புடிச்சே.

வே. ஏண்டா சாமா! அவன்தான் தெரியாதெ சொன்னலும், நீ ஏண்டா சரியா சொல்லிக்கொடுக்கலே? நாயே வா என்னடா அது? நாயே கா!—கவனம் வச்சிக்கோ. சரி, போனுப்போவுது. அப்றம் ஆவட்டும், நாழி ஆச்சி.

ஆ. நான் ஒத்திகெ பண்ணலெ அப்பா, மீதி எல்லாம் நாளெக்கு ஆவட்டும்.

வே. அப்டித்தான் ஆவட்டும்—ஒண்ணும் முடியுவிப் போவலே!—அடே சாமா, நான் வர்ர எடத்துலே இர்ந்து ஆரம்பிடா.

சா. ஆ—"அகோ தெப்படி யென்றல்—கைலாசகிரி மலையிலிருந்து—பரமேஸ்பரன்—எடப வாகன ரூடராய்—பார்பதியம்மனேடும்—விநாயகரோடும்—சுப்பிரமணிய ஐயரோடும்—பூதகணங்களோடும்—பொறப்பட்டு—அதிவேகமாய்—வேட வேஷம் போட்டுக் கொண்டு—வருகிற விதங் காண்க.—"

வே. [பாடுகிறன்] ராகம்—சுருட்டி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

வேடர் நாங்களே—ஐயே மலை
வில்லியர் நாங்களே! வே. [பின்பாட்டு]

அநுபல்லவி.

காடுமலை கிடுகிடென் றதிர்ந்திட
கட்டும் வலை கொண்டு
பொட்டனத் திரியும் வே. [பின்பாட்டு]

சா. அப்றம் மான் வேட்டை.

வே. [பாடுகிறான்.] ராகம்—அபூர்வம். தாளம்—திரிபுடை.
போகுதுபார் ஒருமான் அதுவே கமத்தாய். [பின்பாட்டு.]

சா. நில்லுங்கடா! நில்லுங்கடா!—கமத்தாய் — என்னடா! கமதாய்? க—ம—தாய்!

வே. சத், தப்பு! ரொம்ப தெரியும் இவனுக்கு? கமத்தாய்—கமத்தா போவுது இண்ணு அர்த்தம்.

சா. அப்டி எயுதலியே!

வே. எயுதனவன் தப்பு ஆனா!—அப்றம் என்னடா?

சா. மூகாசுரன்! மூகாசுரன்! அடே! குப்பா! போடா, போடா தூரத்திலே யிர்ந்து ஓடியாரனும்!

கு. ஆமாமாம் —என்னப்பா, எனக்கு வொரு பாட்டு போட்டு குடப்பா இங்கே.

வே. அல்லாம் ஆவட்டும், போ இப்போ நீ! [குப்பன் போகிறான்.]

எல்லோரும் [பாடுகிறார்கள்.]

ராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

அகப்பட்டுக்கொண்டு முழிக்குது பாரையே
வெகு பக்கிக்கூட்டம் ஒருமிக்க வாட்டமுடன். அ.
[பின்பாட்டு]

மறுபடியும் குப்பன் வேகமாய் ஓடி வருகிறான்.

கு. அடேடே! ஓடிப்பூடுங்கடா! ஓடிப்பூடுங்கடா!

சா. அடே, கர்ஜிடா! கர்ஜிடா! ஊம்!

கு. கர்ஜிக்கரது அப்றம் இர்க்கட்டும்! அந்த நட்டுவன், வெங்கு வாத்தியாரு தம் புஸ்தகத்தெ திருடிக்கினு வந்தூட்டானிண்ணு, தலையாரிப் பசங்களெ யெல்லாம் கும்பல் கூட்டிக்கினு வர்ராண்டா! அதோ பார்!

எல்லோரும். ஆமாண்டா! அமாண்டா! [ஓடிப்போகிறார்கள்.]

காட்சி முடிகிறது

# நான்காவது அங்கம்.

இடம்—திரௌபதி கோயில்.  காலம்—இரவு.

*ஒருபுறம் ஒரு கரகம் சிங்காரித்து வைத்திருக்கிறது ;*
*பூஜாரி உடுக்கை யடித்துக் கொண்டிருக்க*
*குடியானவர்களெல்லாம் கும்பலாய்ச் சூழ்ந்து நிற்கின்றனர்.*

குடிகள். *சாமி, அல்லா தெய்வங்களெயும் வர்ணிச் சாச்சா ?*

பூ  *ஆஹா ! இதோ !—*

ராகம்—காம்போதி.  தாளம்—ஆதி.

*வீரன் இருளன் காட்டேரி*
*நொண்டிய சின்னான் பெத்தாச்சி*
*தூறித்துண்டி நல்லண்ணன்*
*பாவாடை இந்த பனமரத்தான்.*

மு. கு. *சாமி, ஆவேசம் எப்பொ வரும் சாமி ?*

பூ.  *சரியா போடுங்கடா, அல்லாம் வரும் !—ஒகோ !*

ராகம்—நீலாம்பரி.

*முண்டாசு கட்டிய சண்டி வீரப்பனே*
*குண்டாக வந்து எங்கள் குறை தீர்ப்பாய் நீயே !*

குடிகள். *சீக்ரம் ! குறி கேக்கணும் சாமி ?*

பூ.  *அடே, அந்த பிரம்ம பத்திரம், பாணகம், எல்லாம் சரியா வச்சியிர்க்குதாடா ?*

இ. கு. *ஆமாம், ஆமாம், சாமி !—சாமி, அல்லா நைவேசம் பண்ணிடுங்கோ.*

பூ.  *ஆ ! ஆ ! அப்டியே.*

*[மணி யடித்துக் கற்பூரம் கொளுத்துகிறான். குடியானவர்களெல்லாம் கும்பிடுகிறார்கள்.]*

மு. கு. *சாமி ! உடுக்கெ எடுத்துக்குங்கோ, குறி கேக்கணும்.*

பூ. கேளுங்கோ! கேளுங்கோ! தச்சிணெ வச்சி கேக்கணும் ஓர்த்தர் ஓர்த்தரா.

[உடுக்கை யெடுத்து அடிக்கிறான், முடிவில் ஆவேசம் வருகிறது.]

மூ. கு. சாமி! இந்த வர்சம் நண்ணு மயெ பேயுமா?

பூ. [பாடுகிறான்.] பேயுமடா மழை பேயுமடா
வாயுமூலெ மழை பேயுமடா!

இ. கு. சாமி! அந்த களத்து மோட்லே போன வர்சம் என் ஆடு காணாப் போச்சே, அது எங்கே இர்க்குது இப்போ?

பூ [பாடுகிறான்.] ஆட்டுக்கடா இருக்குதடா
வீட்டுக்காரி வவுத்தினிலே!

இ. கு. பாத்தியா! அப்பவே நெனெச்சே!

மூ. கு. சாமி! அந்த நந்தக்கோனு என்னெ சண்டெக்கி வலிச்சானே, அவனுக்கு வாந்திபேதி வருமா, சொல்லு?

பூ. [பாடுகிறான்.] வாந்திபேதி அது வாராதுடா
வவுத்துநோவு அது வந்திடுமே!

சோமநாதன் வருகிறான்.

சோ. சாமீ! தண்டம்! தண்டம்!—எனக்குங்கூட ஒரு குறி சொல்லுங்க.

பூ. கேளு, சொல்ரேன்.

சோ. அதாங் கேக்கரனே, சொல்லுங்க.

பூ. கேளு.

சோ. என்னு இண்ணு கேக்ரது?

நா. கு. என்னு ஒணுமோ கேளையா, சொல்லும்!

சோ. எனக்கு, நாளெக்கி கண்ணாலம் ஆவுமா சொல்லு.

பூ. தச்சணெ எங்கே?

சோ. அடே, தச்சணெ கொடுக்கணுமோ?

பூ. இல்லாப்போனு அம்மன் குறி சொல்லுமா?

சோ. எவ்வளவு தச்சணெ?

பூ. ஒரு பணம்.

சோ. எங்கிட்ட அரெ பணம்தா இப்பொ இர்க்குது. பாதி சொல்லிடு போதும்.

பூ. கொடு பாக்கலாம்.

சோ. இதொ!—இப்பொ சரியா சொல்லிடு. எனக்கு நாளெக்கி கண்ணாலம் ஆவுமா ஆவாதா?

பூ. [பாடுகிறான்.] கண்ணாலம் அது ஆவாது
எண்ணமெல்லாம் இப்பொ வீணாவும்!

சோ. ஏ! ஆனா என் தச்சணெ குடுத்துடு. அப்பவே சொல்லலே நானு, சரியா குறி சொல்லணும் இண்ணு! கொடுத்துடு ஐயா.

பூ. அதெல்லா முடியாது.

சோ. முடியாதிண்ணா? இது தெரிஞ்சிதான் அரெ பணம் கொடுத்தே!

பானுமதியும் லலிதையும் வருகிறார்கள்.

ல. அம்மா, இதில் எல்லாம் என்ன இருக்கிறது?

பா. அப்படி யல்ல, கேட்டுப் பார்ப்போம்.—ஐயா, எனக்கொரு குறி சொல்லுங்கள்.

பூ. தச்சணெ?

பா. இதோ கொண்டுவந் திருக்கின்றேன் பாக்கு வெற்றிலையுடன்.

பூ. உம்!—என்ன வோணும்?

பா. என் குழந்தைக்கும் ரகுவீரனுக்கும் விவாக மாகுமா?

பூ: [பாடுகிறான்.] நாளைக்கே ஆகிவிடும்
காளைக்கே தக்க பெண்ணே!

பா. மிகவும் சந்தோஷம்.—பார்த்தையா லலிதா, அதைரியப் படாதே, வா.

[லலிதையை அழைத்துக் கொண்டு போகிறாள்.]

சோ. எனக்குத்தானா ஆவாது?—ஐயா! பூசாலி! நாங்கூட வெத்லெ பாக்கெல்லாம் தர்ரேன், எனக்குக்கூட சரியா பாத்து சொல்லிடு.

நா. கு. அதெல்லாம் மறுபடியுங் கேக்கக்கூடாது.

பூ. தச்சணெ கொடுத்தா கேக்கலாம்.

சோ. ஓ! இன்னம் அரெ பணம் வோணுமோ? தெரியுது! தெரியுது!

பங்கஜாட்சி வருகிருள்.

பங்கஜாச்சி! நீ கூட குறி கேக்க வந்தியோ?

ப. ஆமாம், உன்னை கேட்கவில்லை போ.—ஐயா, எனக்கொரு குறி சொல்லுங்கள்.

சோ. இதோ பாரு! இப்பவே சொல்ரே, இந்த சாமி சரியா சொல்லாது!

பூ. தச்சணெ முன்னே!

ப. இதோ. [கொடுக்கிருள்.]

பூ. கேளு வேண்டியத்தெ.

ப. எனக்கெப்பொழுது விவாக மாகும்?

பூ. [பாடுகிருன்.] காலஞ்சென்று ஆகு மம்மா
ஓலமிடக் கால மம்மா!

சோ. உம்! பாத்துக்கினியா? அப்பவே சொன்னேனே! நான் சொல்ரபடி கேளு; நாளெக்கே என்னெக் கண்ணாலம் பண்ணிகோ, அப்பொ இந்த குறி பொய்யாப் பூடும்.

ப. ஆமாம், வாழ்ந்தது! [விரைந்து போகிருள்.]

மு. கு. அடடே! நம்ப வெள்ளெ பிசாசு எப்பொ போவும் அத்தெ கேக்க மறந்துப் பூட்டோமே!

குடிகள். ஆமாம்! ஆமாம்!—சாமி, அத்தெ சொல்லிடுங்க!

பூ. [பாடுகிருன்.] வெள்ளெ பிசாசு வந்தவிதம்
கள்ளத்தனம் நானறியேன்.

குடிகள். இவ்வளவுதானு?

நா. கு. அடே; குறி கேட்டது போதும். நாழி யாப்போச்சி, கரகத்தெ தூக்குவோம்.

[கரகத்தை எடுத்துக்கொண்டு எல்லோரும் போகின்றனர்.]

## நான்காம் இடைக்காட்சி.

இடம்—களத்துமேடு காலம்—காலை.

வெங்கன், சாமன், குப்பன், நாராயணன், வேம்பிலி, ஆசிகான், கோபாலன் முதலானவர் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ஆ. ஒத்திகெ கித்திகெ எல்லாம் போட்டு, இப்பொ நாடவம் நின்னு போரது, இண்ணு—

சா. நானு மாத்திரம் அப்பவே நெனெச்சே!—அந்த புள்ளெ யாருக்கு தேங்கா ஒடெக்காதே ஆரம்பம் பண்ணும் போதே எனக்குத் தெர்யும்.

நா. ஏ! வாத்தியாரெ, நீ போயி கொத்தவாலையாவெ மறுபடியும் கேக்கரது தானெ?

வே. நானு எவ்ளவு கேட்டு பாத்தே! 'எங் கண்ணுலம் அல்லாம் நிண்ணு போச்சிடா! எனக்கு வெசனமா யிர்க்குது. கூத்து கீத்து ஒண்ணும் வேணுண்டா' இண்ணு சொல்லிட்டாரே!

ஆ. ஏன், கண்ணுலம் நிண்ணு போச்சி?

வே. அல்லாம் அந்த சிறுக்கி இர்க்கராளே அவளாலெதான். அவ தான் என்னமோ வத்தி வைச்சூட்டா இண்ணு நெனெக்கரேன்.

ஆ. எந்த சிறிக்கி?

வே. அவதான், அந்த புண்ணியவதி பங்கஜாச்சி யம்மா!

கோ. என்னுடா! கலிஒகமா யிர்க்குது! கொத்தவாலுக்கு கண்ணுலம் இல்லாப்போனு, நம்பளக்குக் கூத்து இல்லியோ?

வே. அப்றம் துரோபதி அம்மன் கோவிச்சிக்கினு? போன வர்சம் பூஜெ சரியா போடாதே, இந்த பிசாசி ஒண்ணு ஊரெ புடிச்சிக்கினு, கல்பா பண்ணுது, இந்த வர்சமும்—

நா. அடே! நானு ஒரு உக்தி சொல்ரெ. நம்போ எல்லாம் கும்பலா போயி கொத்தவாலுகிட்ட, எங்களுக்கு நீங்க துட்டு கொடுக்காப்போனு போவுது, நாங்க சும்மா கூத்து போட்ரோம் இண்ணு சொல்லிப் பாக்கலாம்.

மற்றவர். ஆமாண்டா! ஆமாம்! [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்.

இடம்—ஆற்றங்கரை யோரம், ஆற்றுக்குக் குறுக்காக, பனம் பட்டைகளினுல் கட்டப்பட்ட ஒரு சிறு பாலம். காலம்—இரவு.

குடியானவர்கள் கும்பலாய் நின்று பேசிக்கொண் டிருக்கின்றனர்.

மு. கு. அடே! எல்லாரும் கூச்ச போட்டா என்னமாடா முடியும்?

இ. கு. அதான் நானுஞ் சொல்ரே, அல்லா கூச்சபோட்டா, யார் கேக்கரது?

மூ. கு. ஆமாம், ஒர்த்தனுக்காவது வெவகாரம் தெரிஞ்சா அல்லா? ஒ இண்ணு கூச்ச போட்டா வேலெ ஆயிப் பூடுமா?

நா. கு. ஆமாண்டா, ரொம்ப வெவாரம் தெரிஞ்சவே! நீ சொல்லு ஆறு நாயம்!

மூ. கு. நா என்னு சொல்ரே இண்ணு, இப்பொ, நம்ப சும்மா, கூச்ச போட்ரத்திலே பிரயோஜன மில்லெ; நம்ப கும்பலா ராசா கிட்ட போயி நம்பளுக்கு இந்த பண்ண வேலெ வாணும் இண்ணு சொல்லிடுவோம்.

இ. கு. அது ஒரு யோசனெதான். நம்ப இந்த ஊர்லெ இர்க் கணும் இண்ணு, அந்தப் பிசாசெ முன்னெ ஓட்டட்டும்.

மு. கு. ஆமாம், இல்லாப்போனு நம்பளாலே முடியாது.

மூ. கு. நேரா போயி சொல்லிடலாம். பூஜாலியெ கேட்டா, முதல்லே முடியா திண்ணு, இப்பொ என்னுடா இண்ணு பத்தாடு பொலி போடணும் இண்ரா! பத்தாடுக்கு நம்பொ எங்கே போரது?

இ. கு. ஆமாண்டா, அதாம் நல்ல ஒசனெ; அப்டியே செய்வோம்.

மு. கு. அத்தெத்தா நான் முதல்லியே சொன்னு, ஒரு ஒயுங்குக்கு அப்ப வந்திங்களா? இப்பொதான் தெரிஞ்சுது.

நா. கு. ஆமாண்டா! போன காரியத்தெப் புடிச்சிக்கினு பேச ரத்துலே என்னு புரயோஜனம்? உட்டுடு அத்தெ! இப்பொ நம்ப ராசா எங்கே தெரியுமா?

மற்றவர். அதோ! வர்ராரு! அதோ வர்ராரு!

ராதாப்பிரியனும், பானுமதியும் வருகிறார்கள்.

ரா. ஆமாம், அம்மா, நான் என்ன செய்வது? என்மீது தவறில்லை நான் நேற்றைத்தின முதல், ஊர் எங்கும் தேடிப் பார்க்கிறேன், என் கண்ணுக் ககப்படாது எங்கேயோ ஒளிந்திருக்கிறனே! நேரிற் கண்டால் எல்லாம் விளங்கச் சொல்வேன்.

பா. ஐயா! எல்லாம் உமது கருணை. என் மகள் அன்னம் ஆகாரமின்றி ஒரே வியசனத்தில் மூழ்கித் திக்பிரமை கொண்டவள்போல் இருக்கிறுள். அவள் உயிரைத் தாம் தான் காப்பாற்றவேண்டும். அவள் இறந்தாலும் பெரிதல்ல; இந்த அவமானத்துடன் இறப்பது நியாய மல்லவே!

ரா. ஆம், அம்மா, எப்படியாவது தேடிப் பிடிப்போம் ரகுவீரனை. —யாரடா அங்கே? ரகுவீரனை யாராவது பார்த்தீர்களா?—

குடிகள். [ராதாப்பிரியன் காலில் வீழ்ந்து] சாமி! சாமி! தண்டம் சாமி! தண்டம்!

ரா. என்னடா அது, என்ன சமாசாரம்?

குடிகள். சாமி! நாங்க இந்த ஊர்லே இர்க்கமாட்டோம்! ஓடிப் பூட்ரோம் எங்கேயானு!

ரா. அடே, எல்லோரும் கூச்சலிட்டால் எனக் கொன்றும் கேட்கவில்லை. யாராவது ஒருவன் பேசட்டும்.

மு. கு. அடே, நீ சொல்லுடா ராசாகிட்ட.

இ. கு. ஏ, நீ தான் சொல்லேன்.

மு. கு. அடே, என்னுடா எய்வு!—எவனுவது சொல்லுங்களே!

நா. கு. ஆனு, நீ தான் சொல்லு.

மு. கு. இவுங்கொ என்னு சொல்ராங்க சாமி.—நாங்கல்லா இந்த ஊர்லே இனிமேலெ இர்க்கமாட்டோ, ஊரெ உட்டு ஓடிப் பூட்ரோம் இண்ருங்கோ,—ஏண்டா?

மற்றவர். ஆமாம்.

ரா. ஏன்?

மு. கு. ஏனு? இந்த ஊர்லெ அந்த பிசாசி தொந்தரவு ரொம்ப இர்க்குது, அத்தொட்டுதான்.—ஏண்டா?

மற்றவர். ஆமாம்.

ரா. பிசாசாவது ?—என்னடா பிசாசு ?

மு. கு. அதான் சாமி, அந்த வெள்ளெப் பிசாசி !—ஏண்டா ?

மற்றவர். ஆமாம், ஆமாம் !

ரா. அது என்ன செய்கிறது உங்களை ?

மு. கு. அப்பா !— நேத்து அந்த சோத்துமாட்டெ அப்டியே அறெஞ்சூடப் பாத்துதே ! ராத்திரியானு வெளியிலெ தலெ காட்டக் கூடலே சாமி !

ரா. நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம். நான் அதற்குத் தக்க ஏற்பாடு செய்கிறேன்.

நா. கு. ஆமாஞ், சாமி ! அத்தெ எப்டியாவது ஒட்ணு நாங்க ஊர்லெ இர்ப்போ, இல்லாப்போனு, தலெமேலெ துணியெ போட்டுக்கினு எங்கேயாவது ஓடிப் போரோம்.

பா. இளவரசே ! அதோ ரகுவீரன்.—உம்மைக் கண்டு மறைகிருன்.

ரா. ரகுவீரா ! இங்கே வா இப்படி !

பங்கஜாட்சி பின்தொடர ரகுவீரன் வருகிருன்.

ரகுவீரா, எங்கே போகிருய் ? என்னைப் பார்த்துவிட்டுத் திரும்புகிருயே ! என்மீது ஏதாவதுனக்குக் கோபமா ?

ர. உம்மீது ஒன்றும் கோபமில்லை. நான் அரசராகிய தங்கள் மீது கோபம் கொண்டு பயனென்ன ? அரசர்கள் என்ன வேண்டுமென்ருலும் செய்யலாம், பிரஜைகளாகிய நாங்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது தானே !

ரா. ரகுவீரா ! இம்மாதிரி நீ பேசுதல் உன் புத்திக் கழகன்று ! நீ என்மீது சந்தேகங் கொண்டிருக்கிருய், தெரியுமெனக்கு ; அதை நிவர்த்திக்கும் பொருட்டே உன்னை நேற்றைத் தினம்முதல் தேடிவருகிறேன்.

ர. எனக் கென்ன சந்தேகம் ?

ரா. அப்படிப் பிடிவாதஞ் செய்யாதே ! நான் சொல்வதைக் கேள். உன்னிடம் நான் ஏன் பொய்யுரைக்க வேண்டும் ? உண்மையாகக் கூறுகிறேன், என் வார்த்தையை நம்பு. அன்றைத்தினம் இரவு நான் என் அறையில் நின்றுகொண்

டிருக்கும் பொழுது, திடீரென்று கதவு திறக்கப்பட்டு, லலிதை நித்திரா வஸ்தையிலேயே மெல்ல அறை நடுவில் நடந்து வந்தனள். நான் திடுக்கிட்டு அசைவற நிற்க, தனக்குள் தானே உன்னைப்பற்றிப் பேசத் தொடங்கினள். பிறகு நான் ஜாகரதிசைக்கு எங்ஙனம் கொண்டு வருவதென்று அறியாதவனாய், அங்கிருப்பது நியாயமல்லவென்று வெளியிற் சென்றேன். இதுதான் சத்தியம். இதில் அணுவளவேனும் பொய் யில்லை. உத்தமியாகிய அவள்மீது நீ வீணில் சந்தேகங் கொள்ளாதே. உனக்குப் பெரும் பழியாம் இது.

அரசே! தூக்கத்தில் ஒரு பெண் நடந்து வந்தாள் என்று என்னை நம்பும்படி கேட்கிறீரா?

ரா. ஆம்! இதைப்பற்றி நான் வாசித்திருக்கிறேன். இது ஒருவித வியாதி யாகும். நான் சொல்வதை உறுதியாய் நம்பு ரகுவீரா, இதை ஏளனமாய் எண்ணாதே.

பாதகமாம் பதிவிரதை யவள்மீது
வீணாகப் பழி நீ எண்ணில்
காதலுன்மே லவள்கொண்டு கனவினிலு
முன்னையே தான் கருது கின்றாள்
ஏதமிலாக் காதலியைக் கைவிட்டுச்
செல்லுவையேல் இத்த ரைக்கண்
காதகர்வே றில்லையென்று கட்டுறுதி
யானுரைப்பேன் கவனிப் பாயே.

பா. ரகுவீரா! ரகுவீரா! இளவரசர் கூறுவ தவ்வளவும் உண்மை! அவர் சொல்லை நம்பு. அப்பா, லலிதை உனக்குத் துரோகம் கனவிலும் எண்ணுவாளோ? கனவிலும் உன் பெயரையே சொல்லிப் புலம்புகிறாளே அவள்!

ர. நல்ல சாட்சி நீர் உமது மகளுக்கு!

ரா. ரகுவீரா, இன்னும் உனக்கு உறுதிப்பட எப்படி நான் ரூபிக்கப்போகிறேன்?—வேண்டுமென்றால் பங்கஜாட்சியைக் கேட்டுப்பார். அந்தச் சமயத்திலே என்னறையில் அவள் இருந்தாள்.

ர. யார்?

ரா. பங்கஜாட்சி.

ர. பங்கஜாட்சியா? பங்கஜாட்சி அங்கிருக்கவேண்டிய காரணமென்ன?

ரா. நீ அவளை நேராகக் கேட்டுப்பார்.

ப. அரசே, இதென்ன அநியாயம்? ஒன்றுமறியாத என்மீது அவதூறுரைக்கிறீரே! எனக்கென்ன தெரியும் இவ்விஷயத்தைப்பற்றி? நான் உமது அறையில் அன்றிரவு வரவேண்டிய சந்தர்ப்பமென்ன? ஐயோ! என் பாவமா? லலிதையையும் உம்மையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு என்மீது இவ்வாறு பழி சுமத்துகிறீரோ?

ரா. பங்கஜாட்சி! உண்மையைக் கூறவேண்டுமோ? லலிதையின்மீது ஒரு குற்றமுமில்லையென்று கூறுகிறாயா அல்லது உண்மையைக் கூறிவிடட்டுமா?

ப. ஆம், ஆம்; இந்தப் பயமுறுத்துதலுக்கெல்லாம் நான் இசைவேன் என்று எண்ணவேண்டாம்.—பிராணநாதா, நீர் வாரும்; நாம் இனி இங்கிருப்பது நியாயமன்று! இன்னும் இங்கிருந்தால் வீணில் என்மீது பழி சுமத்துவார் இளவரசர்!

ர. பங்கஜாட்சி! நீ அந்த அறையில் இருந்தனையா அச்சமயத்தில்?

ப. ஐயோ! என் பாவமா? எனக்கென்ன வேலை அங்கே? என்னையும் லலிதையென்று எண்ணிவிட்டீரோ? ராத்திரி காலத்தில் தூக்கத்தில் வேறொரு புருஷன் அறைக்கு நடந்து செல்பவள் நானல்ல.

ரா. பங்கஜாட்சி! நீ அங்கில்லையென்று சத்தியம் செய்கிறாயா?

ப. ஆம், நான்—

சோமநாதன் விரைந்தோடி வருகிறான்.

சோ. —கொஞ்சம் பொறுத்து! அவசரப்படவேணா! இந்த குட்டெ, அங்கெ என்னமா வந்துது இண்ணு சொல்லிட்டு, அப்றம் சத்யம் பண்ணு! [பங்கஜாட்சியின் சவுக்கத்தை வெளியே எடுத்து வைக்கிறான்.]

ரா. ஆ! சரியான வேளைக்குக் கொண்டு வந்தாய்!—பங்க ஜாட்சி, இது உன்னுடையதுதானே?

ர. ஆம்! நான் இதைப் பார்த்திருக்கிறேன்.—ஈசனே! ஈசனே! நான் யாரை நம்புவ திவ் வுலகினில்!—பங்க ஜாட்சி! என்ன சொல்கிறாய் இப்பொழுது? என்னிடத் தில் பொய் பேசுகிறாயா?

[பங்கஜாட்சியைக் குத்திக் கொல் லப்போகிறான்; உடனே ராதாப் பிரியன் தடுக்கிறான். இந்தச் சமயத்தில் குடியானவர்களெல் லாம் 'பிசாசி! பிசாசி!' என்று கூவிக்கொண்டு வெளியே ஓடு கின்றனர்.]

ரா. அதோ! அதோ!

[லலிதை பாலத்தின்மீது உறங்கிய வண்ணம் மெல்ல நடந்து வரு கிறாள். எல்லோரும் ஆச்சரியத் துடன் பிரமித்து நிற்கின்றனர்.]

ஸ்!—ரகுவீரா, பார்த்தனையா நான் கூறியதி னுண்மை! இப்பொழுதும் அம்மா நித்திரையி லிருக்கி றாள்!—ஒருவரும் சந்தடி செய்யவேண்டாம்! கொஞ்சம் கால் தவறினால் அதோகதிதான்! சுவாமி யிருக்கிறார்! பயப்படாதீர்கள்!

பா. கண்ணே! கண்ணே!—

ர. லலிதா! லலிதா!—

ரா. பொறுங்கள்! பொறுங்கள்!

[லலிதை பாலத்தினின்றும் இழிந்து அவர்களிருக்குமிடம் வருகிறாள்.]

ல. பிராணநாதா,—

ரா. [வருந்தும் ரகுவீரனுடன்] ஸ்! பேசுகிறாள்—கேள்!

ல. பிராணநாதா, என்னைக்கைவிட்டு வேறொருத்தியைக் கைப் பிடிக்கப்போகிறீரா? செய்யும் அப்படியே, உமக்கு இஷ்ட மானால். ஆயினும் என்னை ஒருமுறை கண்ணெடுத்துப்

பார்த்து, என்மீது சந்தேகங் கொள்ளவில்லை யென்று கூறி விடும். அவ்வளவு போது மெனக்கு. நான் சுகமாய் உயிர் விடுவேன்—அப்பொழுது!

ரா. கேட்டனையா?

ல. [பணிந்து] ஈசனே, நான் கண்ணீர் விடுவது எனது துயரம் பற்றியே, என் பிராணநாதர்மீது எனக்குக் கொஞ்ச மேனும் கோப மில்லை, அவரை நான் மனப்பூர்வமாய் மன்னித்தேன். என் துயரம் எவ்வளவு அதிகமா யிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் அவர் சந்தோஷம் இருக்குமாக! இதுவே என் கடைசி பிரார்த்தனை உமது பாதத்திற்கு.

ரா. இன்னும் ஏதாவது சந்தேகம் இருக்கின்றதா?

ர. ஹா! கண்ணே!— [லலிதை யருகிற் செல்ல முயல, ராதாப்பிரியன் தடுக்கிறான்.]

ல. ஐயோ, என் மோதிரம்! அதையாவது நான் சாகு மளவும் அவரைப்போல் பார்த்துக் கொண்டிருப்பதற்கு என்னிடமே விட்டிருக்க லாகாதா? அதையும் பிடுங்கிக் கொண்டார்; அவ ரிஷ்டம். அவருக்கு யார் காதலியோ அவள் கரத்தில் தானே அது இருக்கவேண்டும்.—ஆ, புஷ்பங்காள், உங்களையாவது முத்தமிடுகிறேன். நீங்கள் செய்த பாக்கியம்! என் பிராணநாதரின் அதரம் பொருந்தப் பெற்றீர்,—ஐயோ, அவரைப் பிரிந்ததினால் அப்பிரிவை யாற்றாது உதிர்ந்தீர்கள், கல் மனத்தையுடைய நான் பாபி, இன்னும் உயிருட னிருக்கிறேன்.—ஆ! மறுபடியும் என் காதலர் என்முன் வந்து என்னைக் கட்டி யணைத்து ஒரு முத்தம் தருவாராயின்,—

ர. [லலிதையைக் கட்டி யணைத்து] கண்ணே! கண்ணே!

ல. ஆ! பிராணநாதா,—என் மோதிரத்தைத் தாரும்.

[பங்கஜாட்சியின் விரலி லிருந்த மோதிரத்தைப் பிடுங்கி லலிதையின் விரலில் அணிகிறான். பங்கஜாட்சி மெல்லப் போய்விடுகிறாள்.]

ரா. அடே! எல்லோரும் வாருங்க ளிப்படி.

குடியானவர்க ளெல்லாம் மெல்ல வருகின்றனர்.

குடிகள். பிசா சல்லடா! நம்ப லலிதா அம்மாடா!

ல. [கண் விழித்து] ஆ! நான் எங்கே இருக்கிறேன்?—பிராண நாதா! ஐயோ! கனவோ? ஆ! நானிப்படியே கனவி லேயே இருக்கட்டும்,—என்னை எழுப்ப வேண்டாம்!

பா. கண்ணே! இது கன வன்று, நினைவுதான்! கண் விழித்துப் பார்.

ர. கண்ணே, கண் விழி.

ல. பிராணநாதா!

ர. கண்ணே, என்னை மன்னிப்பாய்!

ல. பிராணநாதா! இனிமேல் என்னைவிட்டுப் பிரியமாட்டீரே?

ர. பிரியேன்! பிரியேன்!

ரா. ரகுவீரா, இனிமேலாவது இவ்விளங் கொடிமேல் சந்தேகங் கொள்ளாது சந்தோஷமாய் வாழ்வாயாக!

ர. அரசே, அப்படியே. ஒரு முறை சந்தேகங் கொண்டு நான் பட்டது போதும், வந்தது புத்தி!

பா. மதனும் ரதியும்போல் மனமது மகிழ்ந்திட
மண்ணினில் வாழ்குவீர் எண்ணெடுங் காலம்.

ரா. மனதினில் ஒன்றும் மயக்க மறவே
கனமாய் வாழ்குவீர் காலமுள் ளளவும்.

ல. எந்த ஜன்மந்தனில் ஏது பாக்கியம் செய்தேன்
இந்த ஜன்மந்தனில் இச்சுகம் பெற நான்.

ர. ஏது மீசன் செயல் ஈதும் அவ னருள்
காதலி நந்தமைக் காப்ப தவன் கடன்.

சோ. ஆமாம், நீங்கெல்லா சந்தோஷமாப் பூட்டிங்கோ, நானு என்னு செய்ரது?—பங்கஜாச்சி மெல்ல நழுவிட்டாளே எங்கேயோ!

ரா. சோமநாதா, வருத்தப்படவேண்டாம். அவளை நான் நேரில் கண்டு தக்க புத்தி சொல்லி உன்னையே மணம்புரி யும்படிச் செய்விக்கிறேன்.

சோ. அப்டி செய்தாதான் நல்லது.

குடிவெறியில் தள்ளாடிக்கொண்டு பூஜாரி வருகிறான்.

பூ. அப்பா ! அஞ்சாடு போதும், அஞ்சாடு கொடுத்துடுங்கோ அந்தப் பிசாசே ஓட்டிடுரேன் !

குடிகள். ஆ ! போதும் ! போதும் ! பிசாசெயும் ஓட்டவேணும், ஒண்ணும் வேணும். இப்பொ உன்னெ ஓட்ரோம் !

[அவனை அடித்துத் துரத்துகின்றனர்.)

ரா. எல்லோரும் போவோம் வாருங்கள். நாளைத்தினமே லலிதைக்கும் ரகுவீரனுக்கும் விவாகத்தை முடிப்போம்.

குடிகள். [கூத்தாடிப் பாடுகின்றனர்.)

பல்லவி.

அடே கூத்தாடடா ! அடே கூத்தாடடா !
அந்தப் பிசாசு போச்சுதிண்ணு கூத்தாடடா ! (அ)

அநுபல்லவி.

பிசாசு இண்ணு நம்போ பிசகாக யெண்ணி னம்போ
தாயான அம்மைக்குத் தப்புசெய்து போட்டோம். (அ)

சரணம்.

சங்கடமெல்லாம் போயி சந்தோஷமாகவே நாம்
எங்கணு மாடுவோம் ஏந்திழை பேரெச்சொல்லி. (அ)

[அனைவரும் போகின்றனர்.]

நாடகம் முற்றியது.